திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 8 ஆகஸ்ட் 2005

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆகஸ்ட்—05

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S.	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் பி.எல்.,	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. வே.திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 8
ஆகஸ்ட் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

மொழியில் புதியன புகுதலும்
பழையன தெளிதலும்

இரா.கோதண்டராமன் - 176

கண்ணன் பாட்டு

முனைவர் பெ.சுயம்பு - 189

இளங்கோவடிகள் கண்ட முருகன்

முனைவர் இரா.சாதமதி - 204

மாணிக்கவாசகர் வாழ்வியலுக்கு
காட்டிய நெறிகள்

உ.கருப்பத்தேவன் - 213

மொழியில் புதியன புகுதலும் பழையன தெளிதலும்

இரா. கோதண்டராமன்
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்
புதுச்சேரி

1.0 பழையன கழிதல்

1.1 மொழியின் வளர்ச்சிப் போக்கில் நிகழும் மாற்றங்கள் பலவாகும். இந்த மாற்றங்கள் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரனியல், பொருண்மையியல் முதலான நிலைகளில் நிகழ்வதாகும். ஆய்தம் தனது நேரிய ஒலிப்பை இழந்ததும், றகர வல்லொற்று ரகர இடையொற்றாகத் திரிந்ததும் பல பின் விளைவுகளை (எ-டு. சுவற்றில், வயிறுக்கு) ஒலியனியல் நிலையில் ஏற்படுத்தின. **அழம், *புழம், *மகம்* ஆகியவை *அழன், புழன், மக* எனத் திரிந்தது உருபனியல் நிலையில் நிகழ்ந்த மாற்றங்களாகும். *செய்திலன், செய்திலள், செய்திலர்* முதலான இறந்தகால எதிர்மறை வினைகளும் *அறியலர்* (=அறியார்/அறியமாட்டார்), *வாரலர்* (=வாரார்/வரமாட்டார்) முதலான எதிர்மறை வினைகளும் இக்காலத் தமிழில் வழக்கற்றுப்போனது தொடரனியல் நிலையில் நிகழ்ந்த மாற்றங்களாகும். இந்த மாற்றங்களைத் தவிர வேறு சில சொல்லியல் மாற்றங்களும் தமிழில் நிகழ்ந்துள்ளன. *நினைத்தொறும்* என்ற தொடரானது *நினைம்+தொறும்* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் நிகழும் *நினைம்* என்பது **நினையும்* (நினைக்கும்) என்ற செய்யும் வாய்ப்பாட்டு வினையின் ஒடுக்கமாகும். இதேபோல் கேட்டொறும் (கேண்ம்+தொறும்) என்ற தொடரில் நிகழும் *கேண்ம்* என்பதும் **கேளும்* (=கேட்கும்) என்ற செய்யும் வாய்ப்பாட்டு வினையின் ஒடுக்கமாகும். வல்வினைக்குரிய பல செய்யும் வாய்பாட்டு வினைகள் *தொறும்* என்ற கிளவியின் முன் நிகழ்கையில் மெல்வினைக்குரிய செய்யும் வாய்பாட்டு வினைகளாக நிகழும் நிலை தமிழில் காணப்படுகிறது.[1] கருதுக: *ஆர்த்தொறும்* (ஆர்ம்+, *ஆரும்(=ஆர்க்கும்)), *இழத்தொறும்* (இழம்+, *இழயும் (=இழக்கும்)), *உழத்தொறும்* (உழம்+, *உழயும்(=உழக்கும்)), *வியத்தொறும்* (வியம்+, *வியயும்(=வியக்கும்), *ஈத்தொறும்* (ஈம்+, *ஈயும்(=ஈக்கும்), *களித்தொறும்* (களிம்+, *களியும்(=களிக்கும்)), *விளித்தொறும்* (விளிம்+, *விளியும் (=விளிக்கும்), *கற்றொறும்* (கன்ம்+, *கலும் (=கற்கும்).

1.2 மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளுள் *தொறும்* என்பதன்முன் நிகழும் செய்ம் (<*செயும்) வாய்பாட்டு வினைகள் தொன்மொழிக்கு உரியனவாகும். எடுத்துக்காட்டாக, *களித்தொறும்* என்ற தொடரில் நிகழும் *களியும்* (<*களியும்) என்ற செய்ம் வாய்பாட்டு வினை கருத்தில் கொள்ளத்தக்கதாகும். இந்த வினையின் அடிநிலை வடிவமாகிய **களியும்* என்ற செயும் வாய்பாட்டு வினைத் தமிழில் களிக்கும் என்றே அமையும். களித்தொறும் என்ற தொடர் தமிழில் களிக்குந்தொறும் என்றே வழங்கும். இதனைக் கருத்தில் கொண்டு மேல் பத்தியில் குறிப்பிட்ட தொன்மொழிக்குரிய தொறும் ஈற்று வினைத்தொடர்கள் தமிழில் நிகழுமாற்றினைப் பின்வருமாறு குறிப்படலாம்.

தொன்மொழி வடிவம்	தமிழ் வடிவம்
1 (1) ஆர்த்தொறும் (அகம்.12.6)	ஆர்க்குந்தொறும்
(2) இசைத்தொறும் (அகம்.283.7)	இசைக்குந்தொறும்
(3) இழத்தொறும் (குறள். 940)	இழக்குந்தொறும்
(4) இறைத்தொறும் (பழ.344)	இறைக்குந்தொறும்
(5) உழத்தொறும் (குறள்.940)	உழக்குந்தொறும்
(6) ஈத்தொறும் (பதி.61.12.13)	*ஈக்குந்தொறும்
(7) களித்தொறும் (குறள்.1145)	களிக்குந்தொறும்
(8) கற்றொறும் (பழ.332)	கற்குந்தொறும்
(9) கேட்டொறும் (நற்.157.7)	கேட்குந்தொறும்
(10) சுவைத்தொறும் (புறம். 164.5)	சுவைக்குந்தொறும்
(11) துடைத்தொறும் (ஐங்.358.3)	துடைக்குந்தொறும்
(12) வியத்தொறும் (புறம். 217 .9)	வியக்குந்தொறும்
(13) விளித்தொறும் (நற். 157.5)	விளிக்குந்தொறும்

மேலே தமிழ் வடிவங்களாகிய தொறும் ஈற்று வினைத்தொடர்களில் நிகழும் செயும் வாய்பாட்டு வினைகள் வல்வினைப்பிரிவைச் சார்ந்தவையாகும். ஆனால் தொன்மொழியில் மேற்படி வாய்பாட்டு வினைத்தொடர்களில் நிகழும் செயும் வினைகளை அவ்வாறு கொள்ளமுடியாது. காரணம் இந்த வினைகள் தமிழில் வல்வினை-மெல்வினை வினைத்திரிபு மரபுகள் தோன்றுவதற்கு முன்பே தொன்மொழியில் வழங்கியவையாகும்.

2.0 அடிநிலை அமைப்புக்கள்

2.1 *பழுஉப்பல், குழுஉக்குறி, பரூஉத்திரி* ஆகியவற்றின் நிலைமொழிகளை *பழு, குழு, பரு* எனக் கொள்வார் தொல்காப்பியர். ஆயினும் வரலாற்று நிலையில் இவை **பழுவு, *குழுவு, *பருவு* என்றே இனங்காணப்படும். *பழுஉப்பல், குழுஉக்குறி, பருஉத்திரி* ஆகிய தொடர்களின் நிலைமொழிகள் வரலாற்றுக் கிளவிகளைக் கொண்டவையாகும். *குருவி, பருவி,* ஆகியவை *குரீஇ, பரீஇ* எனத் திரிந்தது போலவே *பழுவு, குழுவு, பருவு* ஆகியவையும் *பழுஉ, குழுஉ, பரூஉ* எனத் திரிந்தன. இதேபோல் அதூஉம், வரூஉம், உண்பதூஉம் ஆகியவையும் **அதுவும், *வருகும், *உண்பதுவும்* ஆகியவற்றின் திரிபுகளாகும். பழந்தமிழில் காணப்படும் செய்யு வாய்பாட்டு வினைகள் அனைத்தும் செய்யுபு வாய்பாட்டு வினைகளின் திரிபுகளாகும். எ-டு. *<நினையுபு* (கலி.57.22) *<நினைபு* (அகம்.298.19). *வளையுபு* (கலி.103,16) *வளைபு*. செய்கு வாய்பாட்டு மெல்வினைகள் அனைத்தும் இதேபோல் செய்யுகு வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கங்களாகும். எ-டு. *எரிகு* (எரிகு+அ) / *எரியுகு* (எரியுகு+அ. மலயாளம்). பேச்சுத் தமிழில் நிகழும் செய்யுது வாய்பாட்டு ஒன்றன்பால் நிகழ்கால வினைகள் அனைத்தும் செய்யுந்து வாய்பாட்டு வினைகளின் திரிபுகளாகும்.

2.2 பழந்தமிழில் நிகழும் பல வினையமைப்புக்கள் தொடர்பான அமைப்பாய்வு மறுபரிசீலனைக்கு உரியதாகும். *செய்மார், செய்தும், செய்கும், செய்மின், செய்மதி, செய்மோ, செய்திசின், செய்தமாறு* முதலான வாய்பாட்டு வினையமைப்புக்கள் இந்த வகையில் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும். இவையனைத்தும் *வினையடி+மார்/தும்/கும்/மின்/மதி/மோ, செய்து+இசின், செய்த+மாறு* என மரபிலக்கணிகளால் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த அமைப்பாய்வானது வினைப்பகுதிகள் அல்லது வினையமைப்புக்கள் வழக்கில் நிகழ்வனவாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததாகும். ஆனால் மேற்குறிப்பிட்ட வாய்பாட்டு வினையமைப்புக்கள் அனைத்தும் (வரலாற்று நோக்கில்) பின்வருமாறு மாற்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும்.

வினையமைப்பு	மரபிலக்கண ஆய்வு	மாற்றாய்வு
2 (1) செய்மார்	செய்+மார்(தொல்.சொல்.சேனா. 7,207)	*செய்-ம்+ஆர்
(2) செய்தும்	செய்+தும்(தொல்.சொல் சேனா.202)	*செய்-த்+உம்
(3) செய்கும்	செய்+கும்(தொல்.சொல் சேனா.202)	*செய்-க்+உம்
(4) செய்மின்	செய்+மின்(தொல்.சொல் சேனா.274)	*செய்ம்+இன்
(5) செய்மதி	செய்+மதி(தொல்.சொல் சேனா.274)	*செய்ம்+அதி

வினையமைப்பு	மரபிலக்கண ஆய்வு	மாற்றாய்வு
(6) செய்மோ	செய்+மோ(தொல்.சொல் சேனா.274)	*செய்ம்+ஓ)
(7) செய்திசின்	செய்தி+சின்(தொல்.சொல் சேனா.274)	*செய்து+இசின்
(8) செய்தமாறு	செய்த+மாறு(தொல்.சொல் சேனா.250, நச்.252)	*செய்தம்+ஆறு

செய்மார் வாய்பாட்டு வினைகளைச் செய்+மார் என்று அமைப்பாய்வு செய்வதற்குச் சேனாவரையர் கூறும் அமைதி (தொல். சொல். 7, உரை) ஏற்புடையதன்று. இதேபோல் செயன்மார் வாய்பாட்டு வினைகளைச் செய்வார் வாய்பாட்டு வினைகளின் எதிர்மறையாகக் கொள்ளும் சேனாவரையரின் ஆய்வும்(தொல்.சொல்.207.உரை) ஏற்புடையதன்று. செயன்மார் வாய்பாட்டு வினைகள் செய்மார் வாய்பாட்டு வினைகளின் எதிர்மறைகளாகும்.

3.0 சார்பு நிலை வினைப்பகுதிகள்

3.1 பாய்ச்சல், காய்ச்சல் ஆகியவை பாய்ச்சு, காய்ச்சு ஆகிய வினைப்பகுதிகளின் மீது தோன்றியவையாகும். இதேபோல் அலசல், உரசல் ஆகியவையும் அலசு, உரசு ஆகிய வினைப்பகுதிகளின் அடியாகத் தோன்றியவையாகும். ஆனால் இங்கே குறிப்பிட்டதுபோன்ற பல வினைப்பகுதிகள் அல் விகுதியின் முன் மட்டுமே நிகழும் நிலையும் தமிழில் காணப்படுகிறது. இத்தகைய வினைப்பகுதிகள் சார்புநிலை வினைப்பகுதிகள் (Bound Verbal Bases) எனக் கருதப்படும். எ-டு. 1. *அலைச்சல்* (*அலைச்சு), *எரிச்சல்* (*எரிச்சு-), *துணிச்சல்* (*துணிச்சு-), *குறைச்சல்* (*குறைச்சு-), *விளைச்சல்* (*விளைச்சு-), *நீச்சல்* (*நீச்சு-) *கூச்சல்* (*கூச்சு-), *மேய்ச்சல்* (*மேய்ச்சு-), *புகைச்சல்* (*புகைச்சு-), *தீய்ச்சல்* (*தீய்ச்சு-), *இரைச்சல்* (*இரைச்சு-). 2. *விரிசல்* (*விரிசு-), *கிழிசல்* (*கிழிசு-), *பூசல்* (*பூசு-), *கடைசல்* (*கடைசு-), *நெரிசல்* (*நெரிசு-), *கழிசல்* (*கழிசு-), *ஊசல்* (*ஊசு-), *ஊஞ்சல்* (*ஊஞ்சு-), *தடங்கல்* (*தடங்கு-). *தாவல், மோதல்* ஆகியவை *தாவு, மோது* ஆகிய வினைப்பகுதிகளைக் கொண்டவையாகும். இந்த வரிசையிலும் தமிழில் சார்புநிலை வினைப்பகுதிகள் காணப்படுகின்றன. எ-டு. *காவல்* (*காவு-), *ஆவல்* (*ஆவு-) *காதல்* (*காது-).

3.2 வல்வினை மற்றும் மெல்வினை சார்ந்த செய்கு வாய்பாட்டு வினைப்பகுதிகளும், வல்வினை சார்ந்த செய்யு வாய்பாட்டு வினைப்பகுதிகளும் சார்பு வினைப்பகுதிகளாகக் கருதத்தக்கவையாகும். எ-டு. *தருகுவர்/தருகும்/தருக/தருகின்று* (*தருகு-), *கொடுக்குவர்/கொடுக்கும்/கொடுக்க/கொடுக்கின்று/கொடுக்கின்* (*கொடுக்கு-), *கொடுப்ப/கொடுப்பின்* (*கொடுப்பு-). நன்னூலார் *கின்று* என்பதை

நிகழ்கால இடைநிலையாக இனங்கண்டார். இதன் விளைவாக, செய்கு வாய்பாட்டு வினைப்பகுதிகளை அறியமுடியாமல் போயிற்று. *செய்கின்று* வாய்பாட்டு வினையமைப்புக்கள் உண்மையில் *செய்கு+இன்று* வாய்பாட்டு அமைப்பினவாகும். இந்த அமைப்பில் *-இன்று-* என்பது நிகழ்கால இடைநிலையாகத் துணியப்படும். மரபிலக்கண அல்லது வண்ணனை இலக்கண ஆய்வுகள் சில சமயங்களில் வரலாற்று உண்மைகளை மறைத்துவிடுவதற்குச் செய்கு வாய்பாட்டு வினைப்பகுதிகளே சான்றாக அமைகின்றன. சார்புநிலை வினைப்பகுதிகள் பொதுவாகச் சில குறிப்பிட்ட அமைப்பியல் சூழல்களில் மட்டுமே நிகழ்கின்றன. செய்கு, செய்யு வாய்பாட்டு வினைப்பகுதிகளே சான்றாக அமைகின்றன. சார்பு நிலை வினைப்பகுதிகள் பொதுவாகச் சில குறிப்பிட்ட அமைப்பியல் சூழல்களில் மட்டுமே நிகழ்கின்றன. செய்கு, செய்யு வாய்பாட்டு வினைப்பகுதிகள் இத்தகையவையாகும். ஆயினும் அகராதித் தொகுப்பில் இங்கே குறிப்பிட்ட சார்பு வினைப்பகுதிகளும் இடம்பெற வேண்டும். எடுத்துக்காட்டாக, *துணிச்சு, *எரிச்சு, *நெரிசு, *விரிசு, *ஊஞ்சு, *தடங்கு, *கொடுக்கு, *கொடுப்பு* ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளலாம்.

4.0 மையீற்றுப் பெயர்கள்

4.1 தமிழில் ஏராளமான மையீற்றுச் சொற்கள் காணப்படுகின்றன. ஒப்புமையாக்கத்தின் தாக்கத்தால் தோன்றிய மையீற்றுச் சொற்களைத் தவிர ஏனையவை அனைத்தும் ஐயீற்றுச் சொற்களாகவே கருதப்படும். ஐயீற்றின் முன் நிகழும் மகரம் எழுத்துச் சாரியையாகக் கருதப்படும்.[2] எடுத்துக்காட்டாக *ஒருமை, தாய்மை* ஆகிய சொற்கள் **ஒரு-ம்+ஐ, *தாய்-ம்+ஐ* என்ற அமைப்பினவாகக் (வரலாற்று நிலையில்) கருதப்படும். ஒருவன் ஒருவர் ஆகியவற்றில் நிகழும் வகர மெய் மகரத்தின் திரிபாகக் கருதப்படும். இதேபோல் *தாய்க்கு* என்பதில் நான்கன் உருபின் முன் நிகழும் ககர மெய்யும் மகரத்தின் திரிபாகக் கொள்ளத்தக்கதாகும். மரபிலக்கணிகள் மையீற்றுச் சொற்களாகக் கருதும் பல சொல்லமைப்புக்கள் மேலே குறிப்பிட்ட மாற்று ஆய்வுக்கு உரியவையாகும். இத்தகைய ஆய்வின் மூலம் சொல்லியல் தொடர்பான பல வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ளமுடியும்.

4.2 மையீற்றனவாக மரபிலக்கணிகள் இனங்காணும் சொற்கள் ஐயீற்றனவாக வரலாற்று நிலையில் கருதத் தக்கவையாதலின் இவற்றில் நிகழும் மகர ஈறு அகச்சந்தியிலும் புறச்சந்தியிலும் பல்வேறு திரிபுகளுக்கு இலக்காகின்றது. மகரம் கெடுதலும் இந்தத் திரிபுகளுள் அடங்கும். அகச்சந்தியில் மகர ஈற்றினை எழுத்துச் சாரியையாகக் கருத வாய்ப்பில்லை. ஆனால் புறச்சந்தியில் அதாவது பதப்புணர்ச்சியில் மேற்படி ஈற்றினை எழுத்துச் சாரியைகளாகக் கருதலாம்.

எடுத்துக்காட்டாக, கூர்மை என்ற சொல்லில் நிகழும் மகரம் *கூர்ங்கல்* (<*கூர்-ம்+கல்) என்ற தொடரில் எழுத்துச் சாரியையாக நிகழ்வதைக் காணலாம். *பெருமை* என்ற சொல்லில் நிகழும் மகரமானது *பெருவெளி* (<*பெரும்+வெளி) என்ற தொடரில் கெடுவதைக் காணலாம். ஆனால் *பெருங்குன்று* என்ற தொடரில் மேற்படி மகரம் வருமொழி வல்லொற்றின் இனமெல்லொற்றாகத் திரிந்தமைகின்றது. இங்கே *பெரும்* என்பது *பெருமை* என்ற சொல்லில் நிகழும் நிலைமொழியாகும். *பெருமை* என்பதையும் *பெரும்* என்பதையும் தனித்தனியாக ஆராயமுடியாது. அதாவது *பெரும்* என்ற குறிப்பு வினையுடன் *ஐ* என்னும் உறுப்பு சேர்ந்து *பெருமை* என்ற வடிவம் தோற்றம் கொள்கிறது என்பது நமது கருதுகோளாகும். ஐயீற்றுச் சொற்களின் பகுதியாக நிகழும் மகர ஈற்றுச் சொற்கள் அகச்சந்தியிலும் புறச்சந்தியிலும் நிகழுமாற்றினை பிற்சேர்க்கையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

5.0 வியங்கோள் காட்டும் வெளிச்சம்

5.1 தமிழில் செய்க வாய்பாட்டு வியங்கோள் வினைகள் ஒருவகை வாய்பாட்டு வடிவினவாகும். இவற்றின் எதிர்மறை வினைகள் *செய்யற்க* (<*செய்-அல்+க்க) என்ற வாய்பாட்டு வடிவினவாகத் தோன்றினாலும் சில அமைப்பியல் சிக்கல்களை இங்கே எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மெல்வினை சார்ந்த செய்யற்க வாய்பாட்டு எதிர்மறை வியங்கோள் வினைகள் வல்வினை சார்ந்த வினைகளுக்கு உரியனவாகத் தோன்றுகின்றன. *பறிக்க, கொடுக்க, சேர்க்க, தேய்க்க, கற்க, கேட்க* முதலானவை வல்வினை சார்ந்த வியங்கோள் வினைகளாகும். *வருக, செல்க, தேய்க, சேர்க, உண்க* முதலானவை மெல்வினை சார்ந்த வியங்கோள் வினைகளாகும். மெல்வினை சார்ந்த செய்க வாய்பாட்டு வியங்கோள் வினைகளின் எதிர்மறை வினைகள் **செய்யல்க* வாய்பாட்டினவாய் அமையவேண்டும். ஆனால் இத்தகைய வாய்பாட்டு வினைகள் தமிழில் காணப்படவில்லை. தமிழில் காணப்படும் செய்யற்க வாய்பாட்டு எதிர்மறை வியங்கோள் வினைகள் அடிப்படையில் வல்வினைக்கு உரியவையாகலின் இவற்றின் உடன்பாடு வினைகள் *பறிக்க, அழைக்க, அளிக்க, குடிக்க, சேர்க்க* என அமையவேண்டும். ஆயினும் இவற்றுக்கு நேரான **அளியற்க, *பறியற்க, *அழையற்க* என்பது போன்ற வடிவில் அமைந்த எதிர்மறை வியங்கோள் வினைகளின் நிகழ்ச்சியும் தமிழில் காணப்படவில்லை. இதேபோல் **அளியல், *பறியல், *குடியல்* முதலான வல்வினை சார்ந்த செயல் வாய்பாட்டு எதிர்மறை மற்றும் உடன்பாட்டு வினைகளின் நிகழ்ச்சியும் தமிழில் காணப்படவில்லை. இதனின்றும் செய்யற்க வாய்பாட்டு வினைகளைத் தொன்மொழியின் எச்சங்களாகக் கருதத் தோன்றுகிறது.

5.2 *மறியல், குளியல், சமையல், படையல், பொரியல், அவியல்* ஆகிய செயல் வாய்பாட்டு உடன்பாட்டு வினைகளின் நிகழ்ச்சி தமிழில் காணப்படுகின்றன. இவற்றுள் *மறியல், குளியல், சமையல்* ஆகியவற்றின் நிகழ்ச்சியை *மறியல் போராட்டம், குளியல் அறை, சமையல் வேலை* ஆகிய தொடர்களில் காணலாம். ஆயினும் இவற்றில் உள்ள செயல் வாய்பாட்டு வினைகளைத் தொன்மொழியின் எச்சங்களாகவே தமிழில் குறிக்கவேண்டும். இந்த வினைகள் வல்வினை மெல்வினை சார்ந்த இருவகை வினைத்திரிபு மரபுகள் தமிழில் தோன்றுவதற்கு முன்பே தொன்மொழியில் ஒற்றை வினைத்திரிபு மரபு மட்டும் போற்றப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் வழக்கில் இருந்தவையாகும். *மறியல், குளியல், சமையல், படையல், பொரியல், அவியல்* ஆகியவற்றின் வினைப்பகுதிகள் தமிழில் வல்வினைப் பிரிவைச் சார்ந்தவையாகும். ஆனால் இந்த வினைப்பகுதிகளின் மீதமைந்த *மறியல், குளியல், சமையல், படையல், பொரியல், அவியல்* முதலானவற்றில் காணப்படும் வினைத்திரிபு மரபு தமிழில் வல் வினைக்குரியதல்ல. தமிழில் இவை *மறிக்கல், குளிக்கல், சமைக்கல், படைக்கல், பொரிக்கல், அவிக்கல்* என அமையவேண்டும். இத்தகைய வல்வினை சார்ந்த வினைகளின் நிகழ்ச்சியானது தமிழில் செய்யலாம் வாய்பாட்டு வினைகளில் மட்டுமே காணப்படுகிறது. எ.டு. *மறிக்கலாம், குளிக்கலாம், சமைக்கலாம், படைக்கலாம், பொரிக்கலாம், அவிக்கலாம்.* இதனின்றும் வல்வினை-மெல்வினை சார்ந்த வினைத்திரிபு மரபுகள் தமிழில் தோன்றுவதற்கு முன்பு, அதாவது தொன்மொழியிலிருந்து தமிழ் தனிமொழியாகப் பிரிவதற்கு முன்பு *மறியல், குளியல், சமையல், படையல், பொரியல், அவியல்* என்ற வடிவினவாகவே வல்வினைகளின் *செயல்* வாய்பாட்டு வடிவங்களும் வழக்கில் இருந்தன என்ற உண்மை பெறப்படுகின்றது.

5.3 *குடி, பறி, உரை, கேள், கல்* முதலானவை தமிழில் வல்வினை சார்ந்தவையாயினும் தொன்மொழியில் இவற்றினடியாகத் தோன்றிய செயல் மற்றும் செய்யும் வாய்பாட்டு வினைகள் **குடியல்/*குடியும், *பறியல்/ *பறியும், *உரையல்/*உரையும், *கேளல்/*கேளும், *கலல்/*கலும்* என்று நிகழ்ந்தனவாதல் வேண்டும். தமிழில் காணப்படும் *கேளாமல், கல்லாமல், நில்லாமல், இராமல்* முதலானவற்றின் நிகழ்ச்சியும், தொல்காப்பியத்தில் பயின்று வழங்கும் *நிலையல்/நிலையும், நினையுங்காலை* என்ற தொடரில் நிகழும் நினையும் ஆகியவற்றின் நிகழ்ச்சியும் இந்த உண்மையை வலியுறுத்துவனவாக உள்ளன. அதனால்தான் *தேய்க/தேய்க்க, தணிக/ தணிக்க, சேர்க/சேர்க்க* என்ற இணைகளுக்கு நேரான எதிர்மறை இணைகளின் நிகழ்ச்சி தன்வினை-பிறவினை என்ற பாங்கில்

முழுமைபெறாமற் போய்விட்டது. எனவே *தேயற்க, தணியற்க, சேரற்க* ஆகியவை தன்வினைக்குரியவையா, பிறவினைக்குரியவையா, அல்லது இரண்டுக்கும் உரியவையா என்ற குழப்பம் நிலவுகிறது. அதே சமயத்தில் **குடிக்கற்க, *பறிக்கற்க, *கேட்கற்க, *கற்கற்க *நிற்கற்க* முதலானவற்றின் நிகழ்ச்சியும் தமிழில் காணப்படவில்லை. **குடியற்க, *பறியற்க* முதலானவை கோட்பாட்டு நிலையில் ஏற்புடையவையாயினும் இவற்றின் நிகழ்ச்சியும் தமிழில் இயல்பானதாக அமையவில்லை.

6.1 தமிழில் தொடர் நிகழ்ச்சி வினைகள் (Continuous / Progressive Participles) *செய்து கொண்டு* என்ற வாய்பாட்டிலும் செயல்நிறைவு வினைகள் (Perfective Verbs) *செய்துவிடு* வாய்பாட்டிலும் அமைகின்றன. ஆனால் பேச்சுவழக்கில் குமரிமாவட்டக் கிளை மொழியிலும் பார்ப்பனக் கிளைமொழியிலும் இந்த வாய்பாட்டு வடிவங்கள் வேறு வாய்பாட்டு வகையினவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பார்ப்பனத் தமிழில் *பாடிண்டு* என்பது *பாடிக்கொண்டு* என்பதற்கு நேரான வடிவமாகும். *பாடிண்டு* என்பது பழந்தமிழில் வழங்கும் *பாடின்று* என்ற இறந்தகாலப் பொதுவினைமுற்றின் (Past Impersonal Finite Verb) திரிபாகும்.[3] பின்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்க.

3. மறுமை நோக்கின்றோ வன்றே,
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே (புறம்.141.14,15)

இந்த எடுத்துக்காட்டில் *நோக்கின்றோவன்றே* என்ற எதிர்மறைத் தொடரில் நிகழும் *நோக்கின்று* என்பது இறந்தகாலப் பொது வினைமுற்றாகும். *பாடிண்டு* என்ற தொடர் நிகழ்ச்சி வினையில் காணப்படும் *-இண்டு* (<-*இன்று) என்பது துகர ஈற்றுச் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்தும் ஒப்புமையாக்கத்தின் தாக்கத்தால் பார்ப்பனத்தமிழில் இடம்பெறுகின்றது. *வந்திண்டு, கொடுத்திண்டு, குடிச்சிண்டு* ஆகிய வினைகளில் இதனைக் காணலாம். கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் இத்தகைய வினைகள் நிகழ்வெச்ச வினைகளாக (Present Participles) அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, *ஓதுத்து* (=படித்துக்கொண்டு) என்பது கன்னடத்திலும், *பாடுத்உ* (=பாடிக்கொண்டு) என்பது தெலுங்கிலும் நிகழ்காலத்துக்குரிய வினையெச்சங்களாகும். இத்தகைய வினையெச்சங்கள் தமிழில் காணப்படவில்லை. ராபர்ட் கால்டுவெல்லும் (1961:487) இதனைச் சுட்டுகிறார். பழந்தமிழில் காணப்படும் செய்யூஉ வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் அதாவது முந்து தமிழில் (Pre Tamil) நிகழ்கால வினையெச்சங்களாக நிகழ்ந்திருக்கலாம்.

6.2 *ஆடிற்று, பாடிற்று* முதலான வினைகள் பொதுவினை முற்றுக்களாகவும் நிகழும் நிலை காணப்படுகிறது. *சொல்லிற்றலன்* (புறம். 150. பழைய உரை) என்பதில் *சொல்லிற்று* என்பது பொதுவினைமுற்றாகும். *யாதனுருபிற் கூறிற் றாயினும், பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்* (தொல், சொல், சேனா. 106) என்ற நூற்பாவில் *கூறிற்று* என்பதும் பொதுவினைமுற்றாகும். குமரித் தமிழில் தொடர் நிகழ்ச்சி வினையும், செயல் நிறைவு வினையும் *பாடிற்று* என்பது போன்ற இறந்தகாலப் பொதுவினைமுற்றின் திரிபுகளாகக் காணப்படுகின்றன. ஐசக் அருமைராஜனில் (1975) இவற்றின் நிகழ்ச்சியைக் காணலாம். பின்வரும் எடுத்துக் காட்டுக்களைக் கருத்தில் கொள்க.

<u>தொடர் நிகழ்ச்சி வினை</u>

4 (1) குளிச்சிற்றிருக்கா (ப.2) "குளித்துக்கொண்டிருக்கிறாள்"
(2) ஒனக்குக் கொஞ்சம் கடலையும் வாங்கிற்று (=வாங்கிக் கொண்டு) வா(ப.3)
(3) நானே போயி......... ஒரு சேல வாங்கிற்று (=வாங்கிக் கொண்டு) வாரேன் (ப.52)
(4) பாலையா.................... தூக்கிற்று (=தூக்கிக்கொண்டு) போயிற்றான் (ப.72)
(5) ரெண்டு நாரு பெட்டியும் எடுத்துற்று (=எடுத்துக்கொண்டு) வால(ப.84)
(6) கடன் ஏறிற்றே (=ஏறிக்கொண்டே) போவு(ப.90)
(7) டாக்டர கூட்டிற்று (=கூட்டிக்கொண்டு) வாரேன் (ப.168)

<u>செயல் நிறைவு வினை</u>

5 (1) பொஸ்தகம் வாங்காம வராண்டாம்னு வாத்தியாரு சொல்லிற்றாரு(=சொல்லி விட்டார்) (ப.3)
(2) கொத்தனாரும் வேறு ரெண்டு மூணு பேரும் அங்க கூடிற்றாங்க(=கூடிவிட்டார்கள்)(ப.4)
(3) ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிற்றாங்க (=கொண்டுபோய் விட்டார்கள்) (ப.4)
(4) லைட்டெல்லாம் வயலுக்குள்ள நொழஞ்சிற்று (=நுழைந்துவிட்டது) (ப.33)
(5) மீனக் கழுவிற்றேன் (=கழுவிவிட்டேன்) (ப.49)
(6) எனக்க தாலிய வித்துற்றேன் (=விற்றுவிட்டேன்) (ப.51)
(7) பாலையா.................தூக்கிற்று போயிற்றான்)=போய்விட்டான்) (ப.72)
(8) இதுக்குள்ள மறந்துற்றானே (=மறந்து விட்டானே) (ப.130)
(9) முத்தையா வீடு வந்துற்று (=வந்துவிட்டது) (ப.146)
(10) அப்பாகிட்ட சொல்லிற்று (=சொல்லிவிட்டு) வரட்டா? (ப.5)
(11) ஏ, மேரி வேணும்னா போயிற்று (=போய்விட்டு) வா(ப.7)

ஆடிற்று, பாடிற்று முதலான பொதுவினை முற்றுக்களில் நிகழும் *-இற்று* என்பது துகர ஈற்றுச் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்தும் ஒப்புமையாக்கத்தின் தாக்கத்தால் நிகழும் நிலையை மேல் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.[4]

பிற்சேர்க்கை

1. அணிமை	அணிம்	அணித்து (<அணிம்+த்உ)[5]	-------
2. அருமை	அரும்	-------	அரும்பணி
3. இளமை	இளம்	இளவல் (<இளம்+அல்)	இளம்பருவம் இளவேனில்
4. இறைமை	இறைம்	இறைவன் (<இறைம்+அன்)	இறைப்பணி
5. இனிமை	இனிம்	இனிப்பு (<இனிம்+ப்உ)	-------
6. உரிமை	உரிம்	-------	உரிப்பொருள்
7. எழுமை	எழும்	எழுவர் (<எழும்+அர்)	எழுபது (எழும்+பது)
8. ஒருமை	ஒரும்	ஒருவன் (<ஒரும்+அன்) ஒருத்தி (ஒரும்+த்இ)	ஒருக்கால் 'ஒருவேளை'
9. கடமை	கடம்	?கடவது (<கடம்+அது)	கடப்பாடு, கற்புக்கடம்
10. கடுமை	கடும்	-------	கடும்போர்
11. கயமை	கயம்	கயவன் (<கயம்+அன்) கயத்தி (<கயம்+த்இ) (க.ரா.1542)	-------
12. கருமை	கரும்	கருப்பு (<கரும்+ப்உ)	கருங்குவளை
13. கிழமை	கிழம்	கிழவன் (<கிழம்+அன்) கிழத்தி (<கிழம்+த்இ)	------- -------
14. குறுமை	குறும்	-------	குறுந்தொகை, குறுநகை
15. கூர்மை	கூர்ம்	-------	கூர்ங்கல்
16. கொடுமை	கொடும்	-------	கொடுஞ்சொல்
17. கொழுமை	கொழும்	க்ரொவ்வு (<*கொழுவு)(தெ)	கொழுங்கொடி
18. சிறுமை	சிறும்	சிறுமி (<சிறும்+இ) சிறுவன் (<சிறும்+அன்)	சிறுக்கன்று (நாலா. 174)
19. செம்மை	செம்	செம்பு (<செம்+பு)	செங்குவளை, செவ்வாழை
20. சேய்மை	சேய்ம்	சேய்த்து (<சேய்ம்+த்உ)	-------
21. தலைமை	தலைம்	தலைவன் (<தலைம்+அன்)	தலைச்சங்கம்
22. திறமை	திறம்	திறவோர் (<திறம்+ஓர்)	-------
23. தீமை	தீம்	தீங்கு (<தீம்+கு), தீம்பு (<தீம்+பு)	தீச்செயல்

24. பசுமை	பசும்	-------	பசும்புல்
25. பசுமை	பசும்	பசும்ப்உ/பசுப்உ (தெ) மஞ்சள்	பசும்பொன் தங்கம்
26. பருமை	பரும்	பருமன் (<பரும்+அன்)	பருப்பொருள்
27. பழமை	பழம்	---------	பழங்காலம், பழமொழி
28. புலமை	புலம்	புலவன் (<புலம்+அன்)	புலநெறி
29. பெருமை	பெரும்	பெருப்பம் (<பெரும்+ப்உ)	பெரும்பணி
30. புதுமை	புதும்	புதுவது (<புதும்+அது)	புதுப்பாடல்
31. பொதுமை	பொதும்	--------	பொதுப்பணி
32. பொறுமை	பொறும்	?பொறுப்பு	-------
33. மடமை	மடம்	மடவன் (<மடம்+அன்) மடத்தி (<மடம்+த்இ)	மடச்செயல்
34. முதுமை	முதும்	---------	முதுவேனில்
35. முழுமை	முழும்	முழுவதும் (<முழும்+அது)	முழுப்பயன்
36. வளமை	வளம்	வளப்பம் (<வளம்+ப்உ)	வளநாடு
37. வறுமை	வறும்	வறுவல் (<வறும்+அல்) வறுவு(தெ) 'வற்றல்'	வறும்பூ (மணி.18.20)
38. வெண்மை	வெண்ம் (<*வெளும்)	வெளுப்பு (<வெளும்+ப்உ)	வெண்குடை (வெண்<வெண்ம்)
39. வெம்மை	வெம்	வெம்பு (<வெம்+பு) வெப்பம் (<வெம்+ப்உ-)	வெங்கனல் வெவ்வளி (வெவ்+வளி)
40. வெறுமை	வெறும்	-----------	வெறும்பேச்சு

அடிக்குறிப்புகள்

1. தமிழில் *காண்டொறும்* (<காணுந்தொறும்) என்ற தொடரின் நிகழ்ச்சி பழந்தமிழில் காணப்படுகிறது. *அறிதோறும்* (<*அறிந்தோறும்), *செறிதோறும்* (<*செறிந்தோறும்) ஆகிய தொடர்களின் நிகழ்ச்சியைத் திருக்குறளில் (1110) காணலாம். இந்தத் தொடர்களில் நிகழும் *காண், அறி, செறி* ஆகிய வினைப்பகுதிகள் தமிழில் மெல்வினை சார்ந்த வினைத்திரிபு மரபுக்கு உரியவையாகும். தொன்மொழியில் இவற்றினடியாக அமையும் செயும் வாய்பாட்டு வினைகள், ஒற்றை வினைத்திரிபு மரபுக்கு உரியவையாகலின் *காண்டொறும், அறிதோறும், செறிதோறும்* ஆகியவற்றைத் தொன்மொழி வழக்குகளாகக் கொள்ளமுடியும் என்று தோன்றவில்லை. *நினைத்தொறும்* என்ற தொடரைக் கருத்தில் கொண்டு *காண்டொறும், அறிதோறும், செறிதோறும்* ஆகியவை தொன்மொழியில் **காட்டொறும், *அறித்தோறும்,*

செறித்தோறும் என்று அமைவனவாகக் கருதலாம். ஆயினும் இந்தக் கருதுகோள் நுண்ணாய்வுக்கு உரியதாகும்.

2. இந்தக் கூற்று *அருமை, பெருமை, சிறுமை* முதலான சொற்களில் நிகழும் மகர மெய்க்குப் பொருந்தாது. இவற்றில் நிகழும் *அரும், பெரும், சிறும்* ஆகியவை குறிப்புப் பொதுவினை முற்றுக்களாகத் தொடக்கத்தில் நிகழ்ந்தவையாகும். இவற்றைக் குறிப்புப் பெயரெச்சங்களாகக் கருதமுடியாது. ஏனெனில் இவற்றையடுத்து நிகழும் ஐயென்னும் உறுப்பானது விகுதி அல்லது சாரியையாகக் கருதத்தக்கதாகும்.

3. இந்தக் கருதுகோள் மறுபரிசீலனைக்குரியதாகும். *பாடின்று* என்பதன் திரிபாகிய *பாடிண்டு* என்பதைப் *பாடுகின்று* என்ற செய்கின்று வாய்பாட்டு வினையின் திரிபாகக் கருதுவதற்கும் வாய்ப்புள்ளது. இந்தத் திரிபினை, *பாடுகின்று > பாடின்று > பாடிண்டு* என்று விளக்கலாம். இந்த விளக்கம் ஏற்புடையதாயின் தெலுங்கு, கன்னடத்தைப் போலத் தமிழிலும் தொடர்நிகழ்ச்சி வினை அமைப்பானது செய்கின்று வாய்பாட்டு நிகழ்வினையின் அடியாகத் தோன்றியதாகக் கருதலாம்.

4. பேச்சுத்தமிழில் *பாடிட்டு/வந்திட்டு, பாடிகிட்டு/வந்துகிட்டு* ஆகிய செயல் நிறை வினைகளின் நிகழ்ச்சி காணப்படுகிறது. *பாடிட்டு* என்பதில் நிகழும் *-இட்டு* என்பதைப் பாடிற்று என்பதில் நிகழும் *-இற்று* என்பதன் திரிபாகக் கருதலாம். *பாடிட்டு* என்பதைப் *பாடுகிற்று* (=பாடுகின்று) என்ற நிகழ்வினையெச்சத்தின் திரிபாகக் கருதத் தோன்றுகிறது. இந்தக் கருதுகோள் ஏற்புடையதாயின் *பாடிகிட்டு* என்ற செயல்நிறை வினையைப் *பாடுகிற்று* என்பதன் திரிபாக எண்ணிப்பார்க்கலாம். *பாடுகிற்று* என்பதில் உள்ள *கிற்று* என்பது *கிட்டு* எனத் திரிந்து பாடிகிட்டு என்ற வடிவம் தோன்றியிருக்கலாம். உயிரொலி இயைபின் (Vowel Harmony) காரணமாகப் *பாடுகிற்று* என்பது *பாடிகிட்டு* எனத்திரிய வாய்ப்புள்ளது. இந்தக் கருதுகோள் நிறுவப்படுமாயின் குமரித்தமிழில் காணப்படும் *பாடிற்று* (பாடிக்கொண்டு/பாடிவிட்டு) என்ற வினையமைப்பை நிகழ்கால வினையெச்சமாகத் துணியலாம். இந்தத் துணிபானது தமிழில் நிகழ்கால வினையெச்சம் விடுபட்டுள்ளது என்ற கால்டுவெல்லின் கூற்றை வலுவிழக்கச் செய்கிறது. இங்கே இன்னொரு செய்தியையும் குறிப்பிடவேண்டும். பழைய மலையாளக் கல்வெட்டுக்களில் மெல்வினைத் திரிபுகளில் நிகழும் கின்று என்பதில் உள்ள ககரம் கெட்டு இன்று என்ற காலஇடைநிலை அமைந்த நிகழ்கால வினைகள் காணப்படுகின்றன. (L.V. Ramaswami Ayyar, 1936 : 62). எ-டு.

(<*செய்யின்ற (செய்கின்ற), அருளின்று (<*அருளுகின்று), கொள்ளின்றவர் (<*கொள்கின்றவர்). இந்த எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில்கொண்டு *பாடின்று* (<பாடிண்டு) *பாடிற்று/பாடிட்டு* ஆகியவற்றை முறையே **பாடுகின்று*, **பாடுகிற்று* ஆகியவற்றின் திரிபுகளாகக் கருத வாய்ப்புள்ளது.

5. சில விகுதிகளில் வல்லொற்றுக்களின் நிலையொலித் தன்மையை (Voiceless Character) விளக்கும் பொருட்டு வல்லொற்று ஊர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களை மெய்யும் உயிருமாகப் பிரித்து இந்த ஆய்வில் குறிக்கப்பெற்றுள்ளன. *தீங்கு, தீம்பு* ஆகியவற்றில் *கு, பு* ஆகிய உயிர்மெய் விகுதிகளில் நிகழும் வல்லொற்றுக்கள் அலையொலித் தன்மையினவாகலின் (Voiced Character) அவை மெய்யும் உயிருமாகப் பிரித்துக் காட்டப்படவில்லை.

சுருக்க விளக்கம்

அகம் - அகநானூறு
ஐங் - ஐங்குறுநூறு
க.க. - கம்பன் கழகம்
க.ரா. - கம்பராமாயணம் (கோவை. க.க. பதிப்பு)
நாலா - நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்
கலி - கலித்தொகை
குறள் - திருக்குறள்
சேனா - சேனாவரையம்
சொல் - சொல்லதிகாரம்
தெ - தெலுங்கு
தொல் - தொல்காப்பியம்
நச் - நச்சினார்க்கினியம்
நற் - நற்றிணை
பதி - பதிற்றுப்பத்து
பழ - பழமொழி
புறம் - புறநானூறு
மணி - மணிமேகலை

கருவி நூல்கள்

- ஐசக் அருமைராஜன் 1975. கீறல்கள் சென்னை, கிறித்துவ இலக்கியச் சங்கம்
- Caldwell, Robert. 1961 (4th Edn). A Comparative Grammer of the Dravidian or South Indian Family of Languages, Madras University of Madras.
- Ramaswami Ayyar. 1936. The Evolution of Malayalam Morphology, Ernakulam, The Rama Varma Research Institute Committee (Trichur).

கண்ணன் பாட்டு

முனைவர் பெ. சுயம்பு
ஆதித்தனார் கல்லூரி திருச்செந்தூர்

'அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்'

என்று கவிதைகளையும் கவின்மிகு காவியங்களையும் பிழைபடத் திறனாய்வு செய்யும் வல்லுநர்களைப் பற்றிப் பாரதி நொந்து உரைக்கிறான். ஒரு படைப்பினைத் திறனாய்வு செய்வோர் அதனைப் படைத்தவனின் பண்புகளையும் கொள்கையினையும் தெள்ளத் தெரிந்த பின்னரே ஆய்வு செய்தல் வேண்டும். இன்றேல் பார்வையற்றோர் விளக்கிய யானையின் கதையாகவே திறனாய்வு அமைந்துவிடும்.

பாரதி மகாகவி; தேசியகவி; அமரகவி; புரட்சிக்கவி என்றெல்லாம் பாராட்டப்படுகிறான். ஆனால் இந்தச் சிறப்புக்களுக்கெல்லாம் அடிநாதமாக இருப்பது அவனது வேதாந்தக் கொள்கையாகும். அவன் வேதாந்த நூல்களைச் செம்மையாகக் கற்றவன். அன்னை நிவேதிதா முதலிய வேதாந்திகளோடு நெருங்கிப் பழகியவன். வேதாந்தக் கருத்தின்பால் அவனுக்கு இருந்த பிடிப்பு வெறும் ஏட்டுக் கல்வியைக் கற்று, பிறருக்கு எடுத்துரைத்து, தானும் வாய் மதம் பேசித் திரிவதோடு பேரின்பம் கொள்கிற உபதேசியாரின் பரம்பரையில் ஒருவனாக அவனைச் சேர்த்துவிட வில்லை. சரியோ தவறோ கற்றவழி நிற்க என்ற உன்னதமான வேதாந்தியாக வாழச் செய்தது. அத்வைத வேதாந்தத்தின்படி வாழ்ந்த ஈடு இணையிலாத பெருமகன் பாரதி - இந்தக் கொள்கைப்பிடிப்பே "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பதில்லையே!!" என வீராப்புடன் பாடச்செய்தது. "வானில் பறக்கின்ற புள்ளெலாம்நான்" "மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்" என்றும் "உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்" என்றும் ஞானவைராக்கியத்தை அளித்தது.

பாரதியின் வேதாந்தம் அவனால் புதியதாகப் படைக்கப்பட்ட கருத்தோவியம் அன்று ; அது பாரதமண்ணில் முளைத்து வழி வழியாகச் சான்றோர்களால் பின்பற்றப்பட்டு வந்த அழியாத பெரிய தவ மரபைச் சார்ந்தது.

பொன்னார்ந்த திருவடியைப் போற்றி யங்குப்
புகழுவேன் யானறியும் உண்மையெல்லாம்
முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள்என்றார்
முடிவாக அவ்வுரையை நான்மேற்கொண்டேன்
அன்னோர்கள் உரைத்ததன்றிச் செய்கையில்லை
அத்வைத நிலைகண்டால் மரணமுண்டோ?

என்ற பாடலடிகளில் பாரதி தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். இது போன்ற வெளிப்பாட்டினைத் தனது பாடல்களில் ஆங்கே பரவலாகப் பாரதி வெளிப்படுத்தி இருப்பதைக் காணலாம்.

அத்வைத வேதாந்தம், ஊழ்வினை என்பன பாரதநாட்டு மெய்யறிவியல் கண்ட அற்புதமான கருத்துக்களுள் ஆணிவேரைப் போன்றவையாகும். அனைத்துயிர்களிலும் தன்னைக் கண்டு, அவற்றுக்குத் தொண்டு புரிவதே அமரத்துவம் அடைவிக்கிற உயர் நெறியாகும் ; மனிதப் பிறவி எடுத்ததன் பயனுமாகும் என்னும் இந்த கருத்துக்கள் உலக உயிரினங்கள் அனைத்திடமும் அன்பு செலுத்தி, இப்பாரைத் தெய்வ உலகமாக உயர்த்திடச் செய்யும் வழியாகும். மிகச் சிறந்த இக்கருத்துக்களை உண்மையானவையா? கற்பனைக் கோவையா? என்று அறிதற்கு ஆராய்ச்சிகள் பல காலந்தோறும் நடைபெற்றன. ஆனால் பாரதி போன்றோர் இத்தகைய வெற்று ஆராய்ச்சியில் காலத்தைத் தள்ளிடாமல், இக்கருத்துக்களுக்குள் அடங்கிக் கிடக்கிற பயனையே கண்டனர். அன்பே சிவம் ; மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு ; சத்தியமே கடவுள் - அகிம்சையே அதனை அடைவிக்கிற வழி என்றெல்லாம் திடமாகக் கொண்டு,மக்கள் தொண்டினையே தமது வாழ்வாகக் கொண்டனர் ; ஊனுடம்பு மறைந்த பின்னரும் மக்களால் மறவாது தொழுது வாழ்வில் பின்பற்றப்படுகிற தெய்வங்களாகி விட்டனர். இதுவே அமரநிலை காணீர் என்று பாரதி, மகாத்மா போன்ற சான்றோர் காட்டிய வழியாகும்.

பாரதியின் அத்வைத வேதாந்தம் அவனைப் பெரிய அமரகவி ஆக்கியது. அக்கொள்கையின்பால் அவனுக்கு இருந்த அசைக்க முடியாத பிடிப்பு அரசியல் விடுதலை, சமூக விடுதலை, தனிமனித விடுதலை, ஆன்மீக விடுதலை என்று மனித சமூகத்தின் பல்வேறு விடுதலைகளுக்காகவும் உழைத்திடத் தூண்டியது.

பாரதி காசுக்காகவும் புகழுக்காகவும் பாடிய வெற்றுக் கவிஞன் அல்லன். தனது கொள்கைக்காகப் பாடிய வீரகவி அவன். இந்தக் கொள்கையை அவன் பாடிய பாடல்களிலும் பிற எழுத்தோவியங்களிலும் தவறாது இழைய விட்டுள்ளான்.

பாரதி பாடிய முப்பெரும் பாடல்களுள் கண்ணன் பாட்டு கருத்திலும் வடிவிலும் விவரிப்பு முறையிலும் பழைமையும் புதுமையும் கலந்து மிளிர்கிறது. பழைமையின் தளத்தில் நின்று கொண்டு புதுமையை எதிர்நோக்குவது பாரதியிடம் உள்ள இயல்பான பண்பாகும். இப்பண்பிற்கு நடைமுறையாக கண்ணன் பாட்டு என்னும் பகுதியிலுள்ள பாடல்கள் திகழ்கின்றன.

கண்ணன் பாட்டுக்கள் அனைத்திலும் அத்வைத வேதாந்தமே அடிநாதமாக உள்ளது. இந்த அடிநாதம் கண்ணன் என்னும் இறைவனைத் தோழனாக-தாயாக-தந்தையாக-சேவகனாக-அரசனாக-சீடனாக-சற்குருவாக-குழந்தையாக-விளையாட்டுப் பிள்ளையாக-காதலனாக-காதலியாக-ஆண்டானாக-குலதெய்வமாகப் பலவாறு கண்டு பாடுமாறு பாரதியைத் தூண்டியுள்ளது. 'சர்வம் விஷ்ணு மயம் ஜகத்' 'இறைவன் விச்வரூபி' என்னும் பாரத மெய்யறிவியல் சார்ந்த ஒருயிர்க் கருத்தை உலகுக்கு எடுத்துரைக்கும் பேரவாக் காரணமாகப் பாரதி இப்பாடல்களை எழுதியுள்ளார். ஆசிரியப்பா, விருத்தம் என்னும் செவ்விலக்கிய யாப்பு வடிவங்களையும் சிந்து என்னும் நாட்டுப்புற இலக்கிய யாப்பையும் பாரதி கலந்து பாடுகிறார். முன்னைய யாப்பு கற்ற புலவர்களால் தலைமேல் இருத்திப் போற்றப்படுவது பின்னையது பாமரமாந்தரின் வாழ்வோடு இயைந்தது. உயர்குடியையும் பாமரர்களையும் ஒன்றாகவே கருதும் சமநோக்குடையவன் வேதாந்தி. கவிதைக்கு உரியவை என்று கவிஞர் குலத்தால் பாராட்டப்படும் யாப்பையும் அவர்களால் தீண்டத்தகாதது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மனித வாழ்வோடு இயைந்த யாப்பையும் பாரதி இணைத்துள்ளான். முன்னது செயற்கை வடிவம்; பின்னது இயற்கையானது. இவ்வாறு ஒரு தொலைவான இடைவெளியை அமைத்துப் பிரித்து வைக்கப்பட்டிருந்த இரு கவிதை மரபுகளை ஒருங்கிணைத்துக் கவிதை உலகில் வெற்றிகண்ட புதுமைக் கவிஞன் பாரதி.

யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்

என்று ஆசிரியப்பாவாயினும்,

சுட்டும் விழிச்சுடர் தான் - கண்ணம்மா
சூரிய சந்திர ரோ

என்று சிந்துப்பாட்டாயினும் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய பழகு தமிழ்ச் சொற்களால் அவனது கவிதைகள் பின்னப்பட்டு, நெஞ்சில் நின்று இனிக்கின்றன. கவிதை ஆக்கத்திலும் பாரதி படித்த பண்டிதரைக் குறியாகக் கொள்ளவில்லை. பாமரரை உய்விக்க வந்த

அந்த மாமனிதன் - வேதாந்தக் கருத்தை நடப்பியலாக்கப் பேரவாக் கொண்ட அந்தப் பெரிய மெய்யறிவாளன் ஓர்இனத்தவருக்காக மட்டும் பாட முடியுமா? யாவருக்காகவும் பாடுதலே அவனது குறிக்கோளாக இருந்தது.

இறைவனே உலகமாகவும் எல்லாவுயிரினமாகவும் நம்மைச் சுற்றியுள்ள உறவினர்களாக இருக்கிறான் என்பதனைக் கண்ணன் பாட்டுக்களில் பாரதி வெளிப்படுத்துகிறான். இறைவனுக்கு என்று ஒரு பெயர் இல்லையெனினும், மொழி வழக்கிற்காக அவரவர் பண்பாட்டினை ஒட்டி அவனுக்குப் பெயரிட்டுள்ளனர். இதனால் இறைவனுக்கு எண்ணற்ற பெயர்கள் உருவாகி விட்டன. மக்களின் வாழ்வியலுக்கும் வாழிடச் சூழலுக்கும் ஏற்ப வழிபடு முறைகளை - சடங்குகளைப் படைத்தமையால் அவனை விவரிக்கிற சமயங்களும் பலவாகிவிட்டன. ஆனால் உண்மை நிலையை உணராத இம்மாந்தர்கள் தத்தமது பெயரே (கடவுளே) உண்மையானது, சமயமே சிறந்த வழி என்று மதப்பித்துக் கொண்டு கலகம் செய்து மடிந்து ஒழிகின்றனர்.

யாவருந் தெரிந்திடவே - எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும் சொல்லுவதுண்டு
மூவகைப் பெயர் புனைந்தே - அவன்
செய்திதெரி யாதவர் சிலருரைப்பார்.

திடமாக உணராமலே கண்டதும் கோலமாக அமைத்திட்ட சமயத்தின் வழிநின்று கலகம் செய்வதோடு அமையாது, இறைவனுக்கும் சாதியை இணைத்து மனிதரைப் போல அவனையும் பிரித்துக் கேடுசெய்தலும் மாந்தரின் செயலாக உளது. ஓர்நாமமோ ஓர் குலமோ இல்லாத இறைவனை இவ்வாறு இழிவு செய்தல் தகுமா?

தேவர் குலத்தவர் என்றே - அவன்
செய்திதெரி யாதவர் சில ருரைப்பார்
பிறந்தது மறக்குலத்தில் அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்
சிறந்தது பார்ப்பனருள்ளே - சில
செட்டிமக்க ளோடுமிகப் பழக்கமுண்டு.

இறைவன் ஒரு குலம் இல்லாதவன். ஏனெனில் அவன் எல்லாக் குலத்திற்கும் உரிமை உடையவன். அவனுக்கு என்று ஒரு பெயரில்லை. எல்லாப் பொருள்களும் பெயர்களும் அவனுக்கு உரியவை. உருவமிலாதவன் - எல்லாப் பொருள்களும் உருவங்களும் அவன்தானே.

இராமன், சிவன், மாரி, இயேசு, புத்தன் என்று எல்லா தெய்வங்களையும் ஒரு நிலையில் நோக்குபவன். இத்தெய்வங்களுக்கிடையே கண்ணனே இப்பெருங்கவிஞனைப் பெரிதும் கவர்ந்துள்ளான், அவன் பாரதப் பண்பாட்டின் அடிநாதமாக உள்ள இருவருள் ஒருவன் (மற்றொருவன் இராமன்). அரச குலத்தில் பிறந்தாலும் பாமர இடைக்குலத்தில் வாழ்ந்தவன். தீயவர்களால் நசுக்கப்பட்ட பாண்டவர்களுக்காகப் போராடியவன்.. அறத்தை நிலை நாட்டிட பாரதப் போரை உருவாக்கி, அதன் வெற்றியால் விளைந்த பயன்களுள் எதனையும் துய்க்காத கர்மயோகி. தனது சகோதரி மகனையும் தீயவர்களையும் சமமாக நோக்கிப் போரின் முடிவை உருவாக்கியவன். மாந்தரோடு மாந்தராகத் திரிந்து உறவுகளை அமைத்துக் கொண்டவன். இவ்வாறு கண்ணனது இயல்புகள் பரந்து விரியும் தன்மையன. இந்த இயல்புகளே பாரதி தனது வேதாந்தக் கருத்தை விவரிக்கும்போது இறைவனாகக் கண்ணபிரானைத் தெரிவு செய்யக் காரணம் எனலாம். தவிர, கண்ணபிரான் வெறும் மன்னனாகவோ மாந்தனாகவோ இன்றி, ஒப்புயர்வற்ற வேதாந்தக் கனியாகிய பகவத் கீதையையும் இவ்வுலக மாந்தருக்காக உபதேசித்தவன். உபதேசித்ததோடு நில்லாது, அதன்படி வாழ்ந்தவன்.

பாரதப் பண்பாடே இப்பாரை உய்விக்கவல்லது; மனிதப் பண்பாட்டின் நன்கு பண்பட்ட நிலையை உடையது. எனவே பாரதிக்கு இதன்மீது ஆழ்ந்த பற்றுண்டு. இப்பண்பாட்டின் விளக்கமாகத் திகழ்கிற இதிகாச மாந்தர்கள்பால் அவனுக்கு ஈர்ப்புண்டு. அருச்சுனனும் அவன் தம்பி சகாதேவனும் பாரதியை மிகவாகக் கவர்ந்த இதிகாச மாந்தர்களாவர்.

அருச்சுனன் சிறந்த வீரன் விவேகம் உள்ளவன் உறுதியான உணர்வு (ஸ்திதப் பிரக்ஞை) உடையவன். யாவருக்கும் யாவும் கிடைக்கும் வாய்ப்புள்ள பொதுவுடைமை சமூகத்தை அத்வைத அமரவுலகத்தை கிருதயுகத்தைப் படைக்கும் ஆற்றல் கற்பித்தவற்றை உடனே கற்று, பின்பற்றும் கற்பூர மூளை கொண்டவன். எனவே பாரதிக்கு அருச்சுனன்பால் மிகுந்த நாட்டம் அமைந்திற்று.

மாந்தர் நட்புக்கு இலக்கியமாகக் கண்ணன் அருச்சுனன் நட்பினைப் பாரதி காண்கிறான்.

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே - இனி
என்ன வழியென்று கேட்கில் உபாயம்
இருகணத் தேயுரைப் பான் - அந்தக்

கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன்றில்லேன் - வந்திங்கு
உன்னை யடைந்தேன் என்னில் உபாயம்
ஒருகணத் தேயுரைப் பான்.

எத்துணை நட்பாயினும் இரத்தவுறவாயினும் தன்னுடன் பிறந்தவளைக் களவு மணம் புரிந்து கொள்ளுதற்குக் காதலனுடன் போக்குதற்கு மாந்தர் உடன்படார். இந்த மாந்தர் இயல்பைக் கண்ணபிரான் மீறுகிறான். தங்கை சுபத்திரையைக் காதலன் அருச்சுனனுடன் போக்குகிறான். தனது மதிப்பிற்குரிய அண்ணன் பலராமனுக்கு உடன்பாடில்லாத செயல் என்று உணர்ந்திருந்தும், நட்பின் ஆழம் இதனைச் செய்கிறது. கண்ணனது நட்பு, உறவை விட ஆழமானது. உயிர்காப்பான் தோழன் என்ற முதுமொழியைக் கண்ணன் பல முறை மெய்ப்பித்தவன். அருச்சுனனைக் கர்ணன் முதலிய மாவீரர்களிடமிருந்து காத்து, வெற்றியை வழங்கியவன்.

நட்பின் ஆழத்தை விவரிக்கப் புகுந்த பாரதி தன்னை அருச்சுனனாகப் பாவித்து எடுத்துரைக்கிறான்.

மழைக்குக் குடை பசிநேரத் துணவென்றன்
வாழ்வினுக் கெங்கள்கண் ணன்.

என்று கண்ணனால் தானும் தனது குடும்பமும் சுற்றமும் வாழ்வுபெற்றதை அருச்சுனன் மறவாது விவரிக்கிறான்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்பது நட்புக்கு வள்ளுவன் தரும் இலக்கணம். உலக வாழ்வில் மட்டுமன்றி, ஆன்மீக வாழ்விலும் முன்னேற்றம் அடைதற்கு உறுதுணையாக இருப்பவனே உயரிய நண்பனாவான். துன்பமும் இடையூறுகளும் நேரும்போது செயலாலும் பொருளாலும் உதவுதல் வெளிப்படையானது. தனது நண்பனைச் சிறந்த நற்பண்புகளும் நல்லொழுக்கமும் பொருந்தியவனாக்கி, அவனைப் புகழ்பெற்ற மாந்தனாக உருவாக்குதலே ஒரு நண்பனின் மேன்மையான கடமையாகும். இக்கடமை இரு நண்பர்களையும் இம்மையில் மட்டுமன்றி எல்லாப் பிறவிகளிலும் நன்மைக்கு உரியவர்களாக மாற்றவல்லது.

உள்ளத்தி லேகரு வங்கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடுவான் - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தைசொன் னாலங்கு
காறி யுமிழ்ந்திடு வான்

என்று கண்ணனின் நல்ல பண்புகளைக் கூறும் அருச்சுனன்,

'கீதை யுரைத்தெனை இன்புறச் செய்தவன்'

என்று தனக்குக் கீதை உரைத்து மெய்யறிவு புகட்டியதையும் குறிப்பிடத்தவறவில்லை.

பாரதி இவ்வுலகை உறுப்பியாகவும் தன்னையும் பிற தனித்தனி உயிரினங்களையும் உறுப்பாகவும் நோக்குகிறவன் உறுப்பி முழுவதும் மேம்பட்டாலொழிய உறுப்பு மேம்பாடு அடைதல் இயலாது. உறுப்புக்கள் யாவும் மேம்பட்டாலன்றி உறுப்பி முழுவதும் மேம்படுதல் இயலாது. ஓர் விரல் புண்பட்டாலே மனித உடல் நோயுடையது ஆகிறது. எனவே தனிமனிதரும் சமூகமும் முழுமையாக மேம்பட வேண்டும் என்பது அவனது விருப்பம். இந்த மேம்பாட்டிற்காக உழைத்தவன் கண்ணபிரான். கண்ணபிரான் பால் பாரதிக்குப் பெருநாட்டம் உருவானதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

அருச்சுனன் சாதாரண உலகியல் இன்பத்தையும் புகழையும் விரும்புகிற மாந்தருள் மேம்பட்டவன். எனவே அவனுக்கும் கண்ணனுக்கும் இடையே உள்ள நட்பினைப் பாரதி உலகியல் கண் கொண்டு பார்க்கிறான். ஆனால் சகாதேவனோ அருச்சுனனிலிருந்து வேறானவன். இவ்வுலகில் வாழ்ந்தாலும் அதன் இன்ப, துன்ப நுகர்ச்சியைத் துச்சமாக மதிப்பவன், தண்ணீரில் வாழ்ந்தாலும் அதில் ஒட்டி அழுகி மாய்ந்து போகாமல் இருக்கிற தாமரைஇலையைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கிற சீவன்முத்தன் சகாதேவன். இயல்பாகவே மெய்யறிவு வாய்க்கப் பெற்றவன் அத்வைத மெய்யறிஞன். இந்த அறிஞனுக்கு இறைவன் தாயாகவே காணப்படுகிறான். இது மெய்யறிவினால் கிடைத்த பட்டறிவின் விளைவாகும்.

பாரதி இந்தஉலகத்தையும் ஏனைய கோள்களையும் (பிரபஞ்சத்தை) சகாதேவன் வாயிலாகப் பார்க்கிறான். கண்ணன் என்னும் தாய் பிரபஞ்சத்தை உடலாகக் கொண்டவள். வான் அவளுக்கு கை,மண் அவளது மடி, சந்திரன், மேகம், கடல் எல்லாம் அத்தாய் தனது மக்களுக்கு விளையாடி மகிழப் படைத்திட்ட பொம்மைகளாகும். சுறாக்களும் மீன்வகைகளும் தோழர்களாவர், 11 பிரபஞ்சத்தைத் தாயாகக் கருதும் பாரதி தனக்கு இந்த நிலவுலகம் முழுவதுமே உரிமையானது என்று எண்ணி மகிழ்கிறான்.

கண்ணனெனும் பெயருடையாள் - என்னை
கட்டிநிறை வான்எனுந்தன் கையி லணைத்து
மண்ணெனுந்தன் மடியில் வைத்தே - பல
மாயமுறுங்கதைசொல்லி மனங்களிப் பாள்

நில எல்லைகள், அரசியல் கட்டுப்பாடுகள் அற்ற எல்லாநாடுகளிலும் யாரும் வாழலாம் என்ற ஆன்மீகம் சார்ந்த பொதுவுடைமையைப் பாரதி விழைகிறான். இது ஒரு வகையில் காந்தியின் சர்வோதயக் கனவை ஒத்தது.

பாரதியின் ஆன்மீக சகோதரத்துவம் மாந்தர் வாழ்கிற நிலக் கோளைத் தாண்டி, அனைத்துக் கோள்களையும் உள்ளடக்கியது. பிற கோள்களில் உயிரினங்கள் உள்ளனவா இல்லையா என்ற ஆராய்ச்சியில் பாரதி இறங்கவில்லை.

பூமிக் கெனைய னுப்பி னான் - அந்தப்
புதமண்ட லத்திலென் தம்பிகளுண்டு
நேமித்த நெறிப்படி யே - இந்த
நெடுவெளி யெங்கணும் நித்தம் உருண்டே
போமித் தரைகளி லெல்லாம் - மனம்
போலவிருந் தாளுபவர் எங்களினத்தார்.

யாண்டும் மனம் போன போக்கில் மெய்யறிஞர்கள் சிட்டுக் குருவியைப்போல விடுதலையுடன் உரிமையுடன் திரிவர். பாரதியும் அவ்வாறே.

வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை. சான்றோர்களின் வாழ்வியல் நெறிகளும் உண்மைகளும் வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருதலையே வேதம் என்பர். அவையாராலும் படைக்கப்படாதவை. மாந்தர் யாவரையும் சமமாக மதித்து யாவரின் மேம்பாட்டிற்கும் வழிகாட்டுபவை. ஆனால் பிற்காலத்தில் வந்த சில மூட மனிதர்கள் தத்தமது விருப்பு வெறுப்புக்களை வேதங்களில் கலந்து விட்டனர். மாந்தருக்குள்ளே உயர்சாதி, தாழ்ந்த சாதி என்ற இனவேறுபாட்டைக் கற்பித்து விட்டனர். இதனால் அனைத்து இனமக்களும் மேம்படுதல் வேண்டும் என்ற வேதத்தின் குறிக்கோளுக்கு இடையூறு செய்துவிட்டனர்.

வேதங்கள் போத்து வைத்தான் - அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியிலில்லை
வேதங்க ளென்று புவியோர் - சொல்லும்
வெறுங்கதைத் திரளிலவ் வேதமில்லை
வேதங்க ளென்றவற் றுள்ளே - அவன்
வேதத்திற் சிலசில கலந்ததுண்டு
வேதங்க என்றி யொன்றில்லை - இந்த
மேதினி மாந்தர் சொலும் வார்த்தைகளெல்லாம்.

மனிதர்களைப் பிரித்துத் துன்புறுத்துகிற சடங்குகள்,சட்டங்கள் அடங்கிய பகுதியை வேதம் எனப் பாரதி உடன்படவில்லை. வேதாந்தக் கருத்து மட்டுமே அவனதுபார்வையில் வேதமாகும்.

சமூகத்தின் நிருவாக நடைமுறைக்காக அமைக்கப்பட்டது வருணாசிரம தருமம். அதில் பிறப்புப் பற்றிய ஏற்ற தாழ்வுக்கு இடமே இல்லை. யாவரும் ஒருவருக்கு மற்றவர் உதவி வாழ்தற்கான அமைப்பு இது. ஆனால் சில சமூக நலக் கேடர் இவ்வமைப்பில் ஏற்ற தாழ்வுஎன்னும் நஞ்சினைக் கலந்து விட்டனர். இந்த இழி செயல் பாரதியை மிகவும் புண்படுத்தி விட்டது.

நாலு குலங்கள் அமைத்தான் - அதை
    நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்
சீலம் அறிவு தருமம் - இவை
    சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவ ரென்றே - வெறும்
    வேடத்திற் பிறப்பினில் விதிப்பன வாம்
போலிச் சுவடியை யெல்லாம் - இன்று
    பொசுக்கி விட்டா லெவர்க்கும் நன்மையுண்டென்பான்.

போலி வேதங்களைத் தீயுள் இட்டுப் பொசுக்க வேண்டும் என்று தனது தந்தையான கண்ணன் கூறுவதாகப் பாரதி பாடுகிறான்.

கண்ணன் என் சேவகன் என்னும் பாட்டு உலகியலைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. வீட்டில் வேலைக்காக அமர்த்தப்பட்டுள்ள சேவர்களின் இழிபண்புகள் அனைத்தும் படிப்பவர்கள் கண் முன்னர்த் தம்மிடையே வாழ்கிற சேவர்களைக் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

கூலி மிகக் கேட்பார் கொடுத்ததெலாம் தாம் மறப்பார்
    வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா நீ நேற்றைக் கிங்குவர வில்லை யென்றால்
    பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்
    பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்

ஓயாமல் பொய்யுரைப்பார் ஒன்றுரைக்க வேறு செய்வார்
    தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தி யெல்லாம் ஊரம் பலத்துரைப்பார்
    எள்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்
சேவகரால் பட்ட சிரமமிக வுண்டு கண்டீர்
    சேவகரில் லாவிடிலோ செய்கை நடக்கவில்லை.

பாரதியின் விவரிப்புத் திறனுக்கு ஒவியமாகத் திகழ்கிற பகுதிகளுள் தலையாயது இது.

வீட்டுச் சேவகரின் இழி இயல்புகளே பாரதியை ஒரு நேர்மையான சேவகனைத் தேடத் தூண்டியுள்ளது. கண்ணபிரான் சேவகனாக அமைந்தால் எப்படி இருக்கும்? பாரதியின் இந்த நாட்டம் கண்ணன்-என்-சேவகன் என்ற பாட்டாக உருவெடுத்து விட்டது. தனது எசமானின் கட்டளைகள் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்கிறான். அவன் நினைத்ததைக் குறிப்பால் உணர்ந்து நிறைவேற்றி வைக்கிறான். எல்லா வேலைகளையும் மனஈர்ப்புடன் மகிழ்ச்சியுடன் வெறுத்து வாய் முணுமுணுக்காமல் செய்கிறான்.

கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்.

சேவகன் கண்ணன் ஒரு கருமயோகியாக, தனது எசமானனின் நலத்திற்காகப் பிறப்பெடுத்தவனாகக் காணப்படுகிறான்.

பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதியென்று சொன்னான்

கண்ணன் என்னும் சேவகன் தான் பயனை எதிர்நோக்காது கடமை செய்ததன் வழிப் பாரதிக்குச் சிவஞான கருத்தை நடைமுறைப்படுத்திக் காட்டிவிடுகிறான்.

கண்ணனைச் சேவகனாக்கிப் பாடி இன்புற்ற மகாகவி அவனை ஆண்டவனாகவும் பாவித்துப் பாடுகிறான். இப்பாட்டில் இறைவன் ஆண்டான் (எசமான்) பாரதியாகிய ஆன்மா அடிமை (சேவகன்) அன்புடைய ஆண்டானுக்கு அடிமைப் பணிகள் செய்வதில் பாரதிக்கு மிகுந்த மகிழ்ச்சி. உயிர் வாழ்வதற்குத் தேவையான கஞ்சியையும் உலகியல் நடப்பின் சிறப்பான மானத்தைக் காத்தற்கு நாலு முழத்துண்டையும் மட்டுமே வேலைக்குக் கூலியாகக் கேட்கிறான்.

ஒன்பது வாயிற் குடிலினைச் சுற்றி
யொருசில பேய்கள் வந்தே
துன்பப்படுத்துது மந்திரஞ் செய்து
தொலைத்திட வேண்டுமையே
பகையாவுந் - தொலைத்திட வேண்டுமையே

மாயையின் சேர்க்கையால் ஆன இந்த ஊனுடம்பின் இன்பமே உண்மையான வாழ்வு என்று கொண்டு, மனமும் புலன்களும் திரிந்து

அலைதலை இறைவனது அருளால் மட்டுமே தடுத்திட இயலும். எனவே எசமானாகிய கண்ணனிடம் சேவகன் இந்த வேண்டுதலை விடுக்கிறான்.

கண்ணனைக் குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும் பாவித்துப் பாடும் பாட்டுக்களில் பாரதியின் உற்று நோக்கும் திறனும் நோக்கி உட்கொண்டதைத் தெளிவாக விவரிக்கும் திறனும் வெளிப்படுகின்றன.

உச்சிதனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளரு தடீ
மெச்சியுனை யூரார் - புகழந்தால்
மேனி சிலிர்க்கு தடீ
கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்த மாகு தடீ

குழந்தையின் மீது தாய் கொண்ட ஈடிலாத பேரன்பும் அத்தாயின் உள்ள இயல்பும் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைச் செல்வமே ஒப்பற்ற தனிச்செல்வம் என்கிறான் பாரதி.

கண்ணன்-என் விளையாட்டுப்பிள்ளை என்னும் பாட்டு கண்ணபிரான் ஆயர்பாடியில் செய்த குறும்பு விளையாட்டுக்களை மனத்தில் கொண்டு விவரிக்கப்பட்டதாகும். புராணங்களில் படைக்கப்பட்டுள்ள கண்ணனின் விளையாட்டுக் குறும்புகளைப் பாரதி இங்கு வண்ண ஓவியமாக்கியுள்ளான்.

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்

இவை போன்ற விவரிப்புகள் படிப்பவரைப் புராணக் கண்ணனைப் பார்ப்பது போன்ற உணர்ச்சிக்கு ஆளாக்கிவிடுகின்றன.

காதல் உணர்வை மையமாகக் கொண்டு பாடிய பாட்டுக்களே கண்ணன் பாட்டுக்களுள் மிகுதியானவை. கண்ணன் என் காதலன், கண்ணம்மா-என்-காதலி என்று பல பாட்டுக்களைப் பாரதி புனைந்துள்ளார். காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள உறவு

பிரிக்கவியலாதது. உடம்பும் உயிரும் போன்றது ஒருநிலைப்பட்டது. இந்த உறவே இறைவனுடன் ஆன்மா ஒன்றி ஒருங்கிணைதலாகிய முத்திநெறிக்கு மிகவும் உகந்தது என்று கவிஞர்கள் கருதுகின்றனர். நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனை நாயகனாகவும் (காதலனாகவும்) ஆன்மாவை நாயகியாகவும் (காதலியாகவும்) பாவனை செய்து மிகுதியாகப் பாடியுள்ளனர். மானிடக் காதலைத் தெய்வங்களுடன் பொருத்திப் பாடுதலைத் தமிழ் இலக்கிய மரபும் ஏற்கிறது என்பது தொல்காப்பிய விதி. இந்த இலக்கிய மரபு பக்தி இயக்கப் பெருமக்களால் பெரிதும் ஏற்கப்பட்டது. கவிஞர்கள் தம்மைக் காதலியாகவும், இறைவனைக் காதலனாகவும் பாவித்துப் பாடினர். அந்த மரபினைப் பாரதியும் ஏற்றுள்ளான். ஆனால் அதில் புதுமையினையும் புகுத்த அவன் தவறவில்லை. கவிஞன் தன்னைக் காதலியாகப் பாவித்துப் பாடுவது பக்தி இலக்கியம் வரையில் பின்பற்றப்பட்டுவந்த மரபு. கவிஞன் தன்னைக் காதலனாகவும் பாவித்துப் பாடுவது பாரதி செய்துள்ள புதுமை நெறி. இறைவன்பால் கொண்டுள்ள பேரன்பும் ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையின்பாலுள்ள உறுதியும் பாரதியை இவ்வாறு புதுமையாகப் பாடத்தூண்டியுள்ளன.

பழைமையைப் பின்பற்றுதலும் புதுமையைப் புகுத்தலும் கண்ணன் பாட்டில் சிறப்பாகவே இடம்பெற்றுள்ளன. இறைவனைத் தோழனாக எண்ணிப் பக்தி கொள்வது சகமார்க்கம் என்று சைவத்தில் கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தியும் தேவாரப் பதிகங்களும் இத்திறத்தன. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே என்று தாயாகவும் தந்தையாகவும் பாடுதலைச் சைவ, வைணவ அடியார்களிடம் காணமுடிகிறது. அந்தக் காலத்திலேயே இறைவனைக் குழந்தையாகவும் தம்மைத் தாயாகவும் பாவித்துத் தமது பேரன்பைப் பெரியாழ்வார் வெளிப்படுத்தியுள்ளார். திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்று பாடுகிறது திருவாய்மொழி. இறைவனை மன்னனாகக் கருதுவது பாரத நாட்டில் மட்டுமின்றி, ஏனைய நாடுகளிலும் நிலவுகிற பாவனையே. அவ்வாறே அவனை எசமானாகக் கருதி வழிபடுகிற தாசமார்க்கமும் பழமையானதே. அப்பரடிகளின் பக்தி இத்தகையது. ஆனால் அவனைத் தனக்குச் சேவகனாகப் பாவித்துப் பக்தி செய்வது புதுமையானது. பாரதி இப்புதுமையைச் செய்துள்ளான். இறைவன் சற்குருவாகக் (நல்லாசிரியன்) கருதிப் பக்தி செய்வதும் மெய்யறிவு நூல்களை இயற்றுதலும் பழைய மரபில் காணப்படுவன. ஆனால் பாரதி இறைவனைத் தனக்குச் சீடனாகப் (மாணவனாக) பாவித்துப் பாடுகிறான்.

மலத்திலும் கடவுளைக் கண்டு தொழுக என்று அத்வைத நிலையில் பாடுகிற பாரதிக்கு இது ஆன்மீகக் கொள்கையின் பிடிப்புக் காரணமாக இயல்பானதே. ஆனால் இலக்கிய உலகிற்குப் புதுமை தானே.

கண்ணனாகிய காதலனைப் பிரிந்து அவனைக் காணாத காதல் ஏக்கத்தினால் காதலி (பாரதி) துன்புற்றுத் தேய்கிறாள். தெய்வமாக மதிக்கத் தகுந்த தாயும் உயிரைப் போன்ற தோழியும் தனது அருகில் இருக்கவும் அவள் தனிமையில் இருப்பதாக - ஆதரவு அற்ற அனாதையாக உணர்கிறாள். உணவில் வெறுப்பு இனிய இசையும் அவளுக்கு சாவு மணியோசையாகத் துன்பம் தருகிறது.

தாயினைக் கண்டாலும் - சகியே
சலிப்பு வந்த தடீ

உணவு செல்லவில்லை - சகியே
உறக்கம் கொள்ளவில்லை
பாலுங்கசந்த தடீ சகியே
படுக்கை நொந்த தடீ
கோலகிளிமொழியும் - செவியில்
குத்த லெடுத்த தடீ.

காதலன் பிரிவால் துயருற்ற காதலி கனவில் காதலனைக் காண்கிறாள்.

உச்சி குளிர்ந்த தடீ - சகியே
உடம்பு நேராச்சு

காதலர்கள் கூடிப் பேசியதும் அவர்களது இன்னல்கள் யாவும் மறைந்துவிடுகின்றன.

உயிர்த்தோழியிடம் காதலி தனது காதலின் திறத்தை இவ்வாறு எடுத்துரைப்பது சங்க இலக்கியங்களிலும் காணப்படுகிற தமிழ் இலக்கிய மரபாகும்.

இன்னொரு பாட்டு காதலியின் உள்ள இயல்பை நன்கு வெளிப்படுத்துகிறது. வீட்டில் செறிக்கப்பட்டுள்ள காதலியை இரவில் ஓர் இடத்தில் (இரவுக்குறியில்) காணுதற்கு வருவதாகக் காதலன் செய்தி அனுப்பியுள்ளான். அவனைத் தனிமையில் சென்று காண அவள் மனம் துடிக்கிறது. ஆனால் அவளைச் சுற்றியுள்ள தோழிமார் துயிலாது கதைகளைப் பேசிக் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள். இச்செயல் காதலியின் வெறுப்பை மிகுதிப்படுத்துகிறது.

நேரம் மிகுந்ததின்னும் நித்திரையின்றி - உங்கள்
நினைப்புத் தெரியவில்லை கூத்தடிக்கிறீர்
சோரன் உறங்கிவிழும் நள்ளிரவிலே - என்ன
தூளி படுகுதடி இவ்விடத்திலே
ஊரை யெழுப்பிவிட நிச்சயங் கொண்டீர் - அன்னை
ஒருத்தியுண் டென்பதையும் மறந்து விட்டீர்

காதலனைக் காணும் அவாவுக்கு முன்னர் தோழிகள் வேண்டாதவராகி விட்டனர்.

காதலன் கண்ணனைக் காண்பதற்காகக் காடு முழுவதும் தேடி அலைகிறாள் காதலி. மனோன்மணீயச் சிவகாமி சரிதத்தை இது நினைவூட்டுகிறது. எத்துணைக் காதல் உணர்ச்சி மிகுதியானாலும் மகளிர் நாணம் அழிந்து காதலனைத் தேடி அலைவது தமிழ்ப்பண்பாட்டிற்கும் இலக்கிய மரபிற்கும் முரணானது. ஆரியர் மரபிலும் மேலை நாட்டார் மரபிலும் காணலாம். இது பாரதியின் புத்தாக்கங்களுள் ஒன்றாகும்.

ஒரு பாட்டில் காதலி தனது காதலனிடம் தோழியைத் தூது அனுப்புகிறாள். பிறர் தன்னை மணம் பேசி வருதலை (வேற்று வரைவு) அவனிடம் எடுத்துச்சொல்லி, விரைவில் மணம் பேச வருமாறு சொல்லி அனுப்புகிறாள்.

கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம் - நாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்
அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண்டாம் - என்னும்
அதனையும் சொல்லிடடி தங்கமே தங்கம்

இவ்வாறு கூறித்தூது அனுப்புதல் பழைய மரபுவழிப்பட்டதே.

கண்ணன் தன்னைக் காண வராததோடு அமையாது, இடைக்குலக் கன்னியரிடம் ஏமாற்றுக் காதல் புரிந்து விளையாடிக் கொண்டிருக்கிறான். இது தகாத செயலாகும். நானோ வீரமறக்குலத்துப் பெண். அவன் ஆற்றங்கரையில் என்னிடம் காதல் பேசி, உன்னையே மணந்துகொள்வேன் என்று உறுதி கூறியுள்ளான். அதனை ஊர்முழுவதும் முரசு அறைந்து வெளிப்படுத்திவிடுவேன். இதனை அவனிடம் சொல்லிவிடு.

ஆற்றங் கரையதனில் முன்னமொருநாள் - எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

சோரமிழைத்திடையர் பெண்களுடனே - அவன்
சூழ்ச்சித் திறமைபல காட்டுவ தெல்லாம்
வீர மறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி விடடீ

புதுமைப் பெண்ணைக் காண விரும்பிய பாரதி, இங்குப் புதுமைப் பெண்ணின் வீறாப்புப் பேச்சாகப் பாடியுள்ளார். அவள் காதலனை எச்சரித்துத் தன்னை மணம் செய்து கொள்ளுமாறு விரைவுபடுத்துகிறாள். இவ்வாறு மகளிர் கூறுதல் தமிழ் மரபன்று. இப்பேச்சு காதலனின் மடல் கூற்றை ஒத்துக் காணப்படுகிறது. பாரதியின் புதுமைகளுள் இதுவும் அடங்கும்.

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியவற்றுடன் இணைத்து முப்பெரும் பாடல்களுள் ஒன்றாகக் கண்ணன் பாட்டுக் கருதப்படுகிறது. இப்பாட்டுத் தொகுதியிலுள்ள பாடல்கள் யாவும் கண்ணன் என்ற இறைவனையும் பாரதி என்ற உயிரையும் பாடுபொருளாகக் கொண்டு, வேதாந்தக் கருத்துக்களையும் பக்திச் சுவையினையும் வெளிப்படுத்துகின்றன. பல்வேறு வகைப்பட்ட மாந்தரின் உள்ள இயல்புகளும் பண்புகளும் சமூக நடப்பியலும் கருத்துக்களைக் கவிதைகளாக வளர்ப்பதில் பங்கேற்றுள்ளன. பாரதியின் சமூக-ஆன்மீக மறுமலர்ச்சிக் கொள்கைகள் பாடல்களுக்கு அடிநாதங்களாகக் காணப்படுகின்றன. தமது கொள்கைகளின் நடைமுறையாகப் பாரதி பழைய இலக்கிய மரபுகளையும் புதிய மரபுகளையும் கலந்து கவிதைக் கலைக்கு மெருகு ஏற்றியுள்ளார்.

செந்தமிழ் இதழ் ஆண்டுக் கட்டணம் முடிவுற்ற அன்பர்கள் பேரன்பு கொண்டு உருபா.60/-ஐச் செலுத்திப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

இளங்கோவடிகள் கண்ட முருகன்

முனைவர் இரா. சுதமதி
தமிழ்த்துறை
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்

சித்திரச் சிலம்பு

தேனினும் பாலினும் சுவை தந்து, ஊனிலும் உயிரிலும் கலந்து உறவாடும் உன்னதமான மொழி தமிழ்மொழி. இலக்கிய மணம் பூத்துக்குலுங்கும் இன்பத் தமிழ்மொழியில் இலங்கும் இலக்கியப் பேழைகள் ஐம்பெருங்காப்பியங்கள். ஐம்பெருங்காப்பியங்களுள் பழகு தமிழின் அழகொளிரும் பைந்தமிழ்ப் பேறாக, சிந்தையைக் கவரும் சிலப்பதிகாரம் சிறப்பிக்கப்படுகிறது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனக் கொஞ்சுத் தமிழ்க் கோமானால் பாராட்டப்படும் சிலப்பதிகாரம் வற்றாத வண்ணத் தமிழ்ச் சுவையாகும். அதில் சுரக்கும் ஊற்றுக்கள் மிகப்பலவாகும். அவற்றில் ஒன்றுதான் தித்திக்கும் தேனூற்றாகிய சமயப் பொதுமை.

சமயப்பொதுமை காட்டும் சமரசக் காப்பியமாக, பல்வேறு கோணங்களில் பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது ஒப்பற்ற இச்சித்திரச் சிலம்பு. பட்டை தீட்டப்பட்ட அந்த வைரத்தில் மாயவனும் மாதொரு பாகனும் அருகனும் முருகனும் ஒளி வீசுகின்றனர்.

கவிவேந்தன் இளங்கோவின் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்ப் பூக்காட்டில் குறிஞ்சிக் கிழவோனாகிய கோலக்குமரன் உலாவரும் இடமெல்லாம் தமிழ் மணக்கிறது. தெய்வமணம் கமழ்கிறது. அழகு கொலு வீற்றிருக்கிறது.

மூவுலகும் போற்றும் முருகனின் சிறப்புக்களை முத்தமிழ்ச் செல்வர் இளங்கோ காணும் முறையை மொழிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கண்டேத்தும் செவ்வேள்

தமிழ்க் கடவுள் முருகனின் பேரழகைச் சிலம்புச் செம்மல் தணியாத ஆர்வத்துடன் போற்றும் விதம் சிறப்பைத் தருகிறது.

காப்பிய நாயகன் கோவலனை அவர் அறிமுகப்படுத்தும் மங்கல வாழ்த்துக் காதையிலேயே

அவனும் தான்

மண் தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென்று இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்

என்று கோலக்குமரனின் கோலவடிவோடு கோவலனை ஒப்பிட்டுக் கூறி குமரனின் தோற்றப் பொழிவை நயம்பட உரைக்கிறார் இளங்கோ.

குன்றுவாழ் குமரனின் கொஞ்சும் அழகு கண்டேத்தும் செவ்வேள் என்று சொல்லும் அளவுக்குப் பேரழகா என்ன? அவனை விட வேறு யாரும் அழகில்லையா? இல்லை எப்படி? இதோ, அதற்கும் இளங்கோவே தகுந்த மறுமொழி கூறுகிறார்.

அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடை யான்

அழகிய ஆறு முகங்கள், பன்னிரெண்டு திருக்கைகள், தனக்கு இணையாக வேறு யாரும் இல்லாதவாறு இந்தப் பேரழகைத் தானே உடையவன் முருகப்பெருமான். அது மட்டுமா? கவிவேந்தன் இளங்கோவின் பார்வையில் முருகனின் தோற்றப்பொழிவு மேலும் விரிகிறது.

குன்றக்குரவையில் ஒரு காட்சி

தலைவன் ஒருவன் தலைவியைக் காண வருகிறான். எவ்வாறு? கடம்ப மலர் சூடி வேலினைக் கையில் ஏந்தி வருகிறானாம். தான் தலைவியைக் காண வருவது ஊராருக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் பழி ஏற்படுமே!. எனவே தான் இந்த வேடம். கடம்ப மலரும் வேலும் இருந்தால் காண்போர் தன்னை முருகன் என்று நினைத்துவிடுவார்களாம். எனவே, தலைவியைப் பார்ப்பதில் தடையேதும் இருக்காது என்று எண்ணி வருகிறானாம். தலைவனின் இச்செய்கை தலைவிக்கு நகைப்பைத் தருகிறது. தலைவி கூறுகிறாள்,

கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி
மடந்தை பொருட்டால் வருவது இவ்வூர்
அறுமுகம் இல்லை அணிமயில் இல்லை
குறமகள் இல்லை செறிதோள் இல்லை
கடம்பூண் தெய்வமாக நேரார்
மடவர் மன்ற இச்சிறுகுடி யோரே

"தலைவனே நீ கடம்ப மலர் சூடி, வேலினைக் கையில் ஏந்தி ஒரு மங்கையின் பொருட்டாக இவ்வூருக்கு வருதல், நின்னைக் காண்பார்

உன்னை முருகன் என்று கருதல் வேண்டியே. ஆனால், உனக்கு ஆறுமுகங்கள் இல்லை அழகிய மயில் ஊர்தியும் இல்லை பக்கத்தில் வள்ளியும் இல்லை பன்னிரு தோளும் இல்லை. எனவே, இவ்வூரார் உன்னை முருகனாகக் கருத மாட்டார்கள், (ஆதலால் அவர்கள் அறிவற்றவர்கள்" என்று நகையாடுகிறாள் தலைவி.

தலைவியின் கூற்றில் முருகனின் சுந்தரக்கோலத்தைச் சுவைபடக் கூறிவிட்டார் சிலம்புச் செம்மல்.

அறுமுகச் செவ்வேள்

ஒரு பாடல் உண்டு.

சொல்லச் சொல்ல இனிக்குதடா - முருகா
உள்ளமெல்லாம் உன்பெயரை
சொல்லச் சொல்ல இனிக்குதடா

ஆம் அணிமயிலோனின் அழகிய வடிவம் மட்டுமல்ல. அவன் திருப்பெயர்களும் கூடப் பேரழகோடு விளங்குகின்றன. கவிவேந்தன் இளங்கோ சமணத் துறவிதான். ஆயினும் சமரச ஞானி. அதனால்தான் முத்தமிழோன் முருகனின் முக்கனிச் சுவைப் பெயர்களை ஆங்காங்கே நயம்படச் சொல்லிச் செல்கிறார்.

முருகனின் முகஅழகைப் பாடும் இளவல் இளங்கோ கண்டேத்தும் செவ்வேள் என்றும் அறுமுகன் என்றும் ஆறுமுகச் செவ்வேள் என்றும் உள்ளம் குளிரச் சொன்னவர் அத்தோடு நின்றுவிடாமல், கோழிச் சேவல் கொடியோன் என்றும் கார் கடப்பந்தாரெங் கடவுள் என்றும் கடம்பூண் தெய்வம் என்றும் அவனை அடையாளமிட்டுச் சுட்டிச்செல்லும் இடமெல்லாம் சொல்லும் வாயும் நினைக்கும் மனமும் இனிக்கின்றன.

அந்தக் கோலக் குமரனைக் காப்பியச் செல்வர் இளங்கோ, ஆலமர் செல்வன் புதல்வன் என்றும் கயிலை நன்மலையிறை மகன் என்றும் மலைமகள் மகன் என்றும் குன்றக்குரவையில் முகவரியிட்டுச் சொல்லும் இடங்கள் முத்திரை வரிகள்.

வென்றிச் செவ்வேள்

மலைக்கிழவோன் முருகன் மகத்தான வெற்றிகளைத் தன் பெயருக்குப் பின்னே இட்டுக்கொள்ளும் பட்டமாகப் பெற்றவன். அதைச் சிலம்புச் செல்வர் சூர்த்திறம் கடந்தோன் என்றும் குருகு பெயர் குன்றம் கொன்றான் என்றும் வென்றிச் செவ்வேள் வென்வேலான் என்றும் அடைமொழி இட்டு அழகாகக் கூறிச்செல்லும் இடமெல்லாம் அவன் வெற்றிகள் ஆரவாரமாய் ஒலிக்கின்றன.

வேல் ஒன்றைக் கொன்றே வெற்றிகளைத் தேடியவன் வேல்முருகன். அழகான வேல்தான். ஆனால் அசுரத்தன்மைகளை அழிக்கவல்லது. வேலனின் வேல் சிறப்புக்குச் சொல் வேந்தன் இளங்கோ காட்டும் ஒரு சான்று நயமானது.

சிந்தைக்குரியது

மனையறம்படுத்த காதையில் ஒரு காட்சி. கோவலன்-கண்ணகி திருமணம் முடித்த அன்றைய இரவில், நிலா முற்றத்தில் கோவலன், கண்ணகியின் அழகைப் பலவாறாக பாராட்டிக் கொண்டிருக்கிறான்.

அவளது நெற்றியின் அழகையும், புருவத்தின் அழகையும் சிற்றிடையின் சிறப்பையும் வர்ணித்த கோவலன் அவள் கண்களின் அழகுக்கு அழகிய உவமை ஒன்றைக் கூறுகிறான்.

அறுமுக ஒருவனோர் பெறுமுறை யன்றியும்
இருமுறை காணும் இயல்பினின் அன்றே
அஞ்சுடர் நெடுவேல் ஒன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா ஈத்தது.

கண்ணகியே ஆறுமுகப் பெருமானிடத்தில் நீ பெற்றுக்கொள்வதற்குரிய உரிமை இல்லாதிருந்தும், அவன் தனது அழகிய நெடிய வேலை, உனது முகத்தில் சிவந்த வரிகளை உடைய குளிர்ந்த கண்கள் இரண்டாகும்படி ஈந்தான் போலும் முருகப்பெருமான் அவ்வாறு வழங்கியதற்குக் காரணம் என்னை வருத்தும் நோக்கத்தினால்தான் என்று கண்ணகியின் நயனங்களின் அழகு தன்னைத் துன்புறுத்துவதாகக் கோவலன் வருணிக்கிறான்.

கண்ணகியின் கண்ணழகுக்கு உவமை முருகனின் வேல் அப்படியெனில் முருகனின் வேல் எத்தகையது?

கண்ணகியின் கண்களைப் போல் குளிர்ச்சியுடையதா என்ன? இல்லையே அவன் கைவேலைப் பற்றி,

கடல்வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து, ஆங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்

என்று பிறிதோரிடத்தில் சுட்டுகிறாரே இளங்கோ. ஆனால், கோவலனின் கூற்றிலோ ஆறுமுகனின் அஞ்சுடர் நெடுவேல் காப்பிய நாயகி கண்ணகியின் செங்கடை மழைக் கண்களுக்கு உருவகமாகச் சொல்லப்படுகிறது. ஏன் இப்படி? காரணமின்றிக் கவிதை வரிகளைப் படைப்பவரல்லவே கவிவேந்தன் இளங்கோ

சற்றே ஆராய்ந்து பார்த்தால் கண்ணகியின் கண்களுக்குக் கதிர்வேலனின் கூர்வேல் உவமையாகச் சொல்லப்பட்ட மதிநுட்பம் புலப்படும். எப்படி?

முருகனின் வேலோடு ஒப்புமை சொல்லப்பட்ட கண்ணகியின் விழிகள் மதுரைக் காண்டத்தில் கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும் அழுகின்றன.

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்

ஆம் செங்கண் சிவப்ப அழுகிறாள் கண்ணகி. அவள் கண்ணீர் கண்டு மதுரை மக்கள் அஞ்சுகிறார்கள்.

ஐயரி உண்கண் அழுதேங்கி அரற்றுவாள்
தெய்வமுற்றாள் போலும் தகையள் இதுவென்கொல்!

என்று புலம்புகிறார்கள். அது மட்டுமல்ல, கண்ணகியின் எந்த வேல் விழிகள் கோவலனைக் கவர்ந்ததோ, அதே விழிகளைக் கொலையுண்ட பின்னும் கோவலன் குறிப்பிடுகிறான்.

எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க எனப் போனான்,

கண்ணகியின் அதே வேல்விழிகள் பாண்டியனையும் பாதிக்கின்றன. நீதி கேட்டு ஒற்றைச் சிலம்பை ஏந்தியவளாய் அரசன் அருகில் வந்த கண்ணகியை,

நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ?

என்று வினவுகிறான் பாண்டியன். இறுதியில் மதுரை தீப்பற்றி எரிகிறது. ஆமாம் முருகனின் வேல் அசுரரை மாய்த்ததால் சிவந்தது. அவன் வேலோடு ஒப்புமை சொல்லப்பட்ட கண்ணகியின் விழிகள் சிவந்ததால் மதுரை அழிந்தது. இரண்டுமே அநியாயத்தை எதிர்த்தன. அழித்தன. காப்பிய வேந்தர் இளங்கோவும் தான் கருதியதைக் கவியாக்கி விட்டார்.

அது மட்டுமல்ல, முருகனின் கைவேலின் சிறப்புகளைக் கூறுவதற்காகவே வஞ்சிக்காண்டத்தில் குன்றக்குரவை என்ற காதையை அமைத்திருக்கிறார் இளங்கோ.

உரவுநீர் மாகொன்ற வேலேந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம் வா தோழி

என்று தோழியை அழைத்து,

`சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே' என்றும்

`மணிவிசும்பில் கோனேத்த மாறட்ட வெள்வேலே' என்றும் குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே என்றும் வேலனின் வேல் சிறப்புகளைச் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றனர் குறமகளிர்.

கோழிச் சேவல் கொடியோன்

கதை நிகழ்வின் திருப்பத்திற்குச் சிலம்பே காரணமாதலின் சிலப்பதிகாரம் என்று அடைமொழியிட்டுத் தன் காப்பியத்தை அழைத்த இளங்கோ அறுமுகனின் அடையாளச் சின்னங்களையே அவன் பெயராக்கி அழைக்கிறார். ஆறுமுகங்களை உடையவன் என்பதால் அறுமுகச் செவ்வேள் என்றும் சேவல் கொடியை உடையவன் என்பதால் கோழிச் சேவல் கொடியோன் என்றும் கடம்ப மாலையைச் சூடியவன் என்பதால் கடம்பன் என்றும் அழகுத் தமிழ்ச் சொற்களால் அவர் அழைக்கும் அழகே தனி.

'பிணிமுகமேல் கொண்டு அவுணர் பீடழித்தவன்' என்று ஆறுமகன் அணிமயிலேறி அசுரரை அழித்தமையையும் குறிப்பிடுகிறார் இளங்கோ.

ஆலமர்ச் செல்வன் மகன்

குன்றக் குமரன் அழகன் அளப்பரிய ஆற்றல் வாய்ந்தவன் தனக்கென அழகிய வேலும் அணிமயிலும் கொண்டவன் மட்டுமல்ல, அன்பான குடும்பத்தையும் உடையவன். இதனைக் குன்றக்குரவையில் மனம் இனிக்கப்பாடுகிறார் இளங்கோ.

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர் திருமுலைப்பால் உண்டான் திருக்கைவே லன்றே என்று சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் முருகன் வளர்க்கப்பட்டச் சூழலைக் குறிப்பிடும் இளங்கோ, அவனை, ஆலமர்ச் செல்வன் புதல்வன் என்றும் கயிலை நன்மலையிறை மகன் என்றும் 'மலைமகள் மகன்' என்றும் குறிப்பிட்டு அவன் சிவன், பார்வதியின் மகன் என்பதை உணர்த்துகிறார்.

கதிர்வேலன் காதல் மணம் புரிந்தவன். கவிவேந்தரும் அதை மறக்கவில்லை. இதோ, குன்றக்குரவையில் முருகன் தன் காதல் மனைவியோடு தோன்றும் காட்சி

'நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்
ஆலமர்ச் செல்வன் புதல்வன் வரும், வந்தால்
மால்வரை வெற்பன் மணஅணி வேண்டுதுமே'

என்கிறாள் மலைநாட்டைச் சேர்ந்த தலைவி ஒருத்தி

அழகு முருகன் ஆசையோடு மணந்து கொண்ட வள்ளியும் அழகு தான்.

'மதிநுதல் மயில்இயல் மடவரல் மலையர்தம் மகளார்'
என்றும்
குலமலை உறைதரு குறவர்தம் மகளார்
என்றும்
'குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவ நின் அடியினைத் தொழுதேம்'

என்றும் மலைமகளிர் ஆடிப்பாடுகின்றார்.

மங்கல வாழ்த்துக் காதையில் கோவலனைச் செவ்வேள் என்று முருகனோடு ஒப்பிட்ட இளங்கோ, குன்றக்குரவையில் காப்பிய நாயகி கண்ணகியை வள்ளியோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

குருவி ஓப்பியும் கிளிகடிந்தும்
குன்றத்துச் சென்றுவைகி
அருவி ஆடியும் சுனைகுடைந்தும்
அலவுற்று வருவேம் முன்
மலை வேங்கை நறுநிழலின்
வள்ளி போல்வீர்! மனநடுங்க
முலையிழந்து வந்து நின்ற நீர்
யாவிரோ?

என்று தம் மலைநாட்டை வந்தடைந்த கண்ணகியை வினவுகின்றனர் குறமகளிர்.

வள்ளியின் சிறப்பைக் குன்றக்குரவையில் பல இடங்களில் குறிப்பிடும் இளங்கோ, தம் காப்பியத்தின் எந்த ஒரு பகுதியிலும் தெய்வானையைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பது சிந்தனைக்குரியது.

நெடுவேள் குன்றம்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்று தமிழர் வழிபாடு நிகழ்வதுண்டு. இளங்கோவும் அதை மறக்கவில்லை. வஞ்சிக்காண்டத்தில் வாழ்த்துக் காதையில் கண்ணகி கடவுளாகக் காட்சியளித்து,

வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்

என்று அன்புடன் அழைக்கிறாள். முருகனை வழிபடக் கோயில்கள் இருந்தமையைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது.

'அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வேற்கோட்டமும்', 'கோழிச்சேவல் கொடியோன் கோட்டமும்' புகாரிலும் மதுரையிலும் காணப்படுகின்றன.

தவிர, வஞ்சிக்காண்டத்தில் முருகனின் இருப்பிடம் குறித்து இளங்கோ குறிப்பிடும் செய்தி சிந்தனைக்குரியது.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே

என்று குன்றக்குரவையில் முருகன் எழுந்தருளியிருக்கும் படைவீடுகள் பற்றிக் கூறப்படுகிறது. அதாவது, முருகன் நீங்காமல் கோயில் கொண்டிருக்கும் இடங்களாகத் திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்று எனப்படும் சுவாமிமலை, திருவேரகம் முதலிய நான்கு படைவீடுகளைக் கூறுகிறார் இளங்கோ.

சிலப்பதிகாரத்திற்குக் காலத்தால் முந்தியதாகக் கூறப்படும் திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய்,

திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறு திருப்பதிகளைக் கூறுகின்றது. இன்றளவும் இப்படைவீடுகள் முருகனின் வழிபாட்டுத் தலங்களாகவே உள்ளன. ஆயினும் திருப்பரங்குன்றமும் திருஆவினன்குடியும் சிலப்பதிகாரத்தில் ஏன் கூறப்படவில்லை என்பது ஆய்வுக்குரியது.

பாட்டும் கூத்தும்

ஆலமர் செல்வன் மகனுக்கு ஆடலிலும் பாடலிலும் ஆர்வம் இருப்பது அதிசயம் அல்ல. அதனால் தான் அவனை மகிழ்விக்கத் தமிழகத்தில் கூத்துக்கள் நடைபெறுகின்றன. அவன் புகழ் பாடியும், அவன் வெற்றிகளை ஆடலிலே வெளிப்படுத்தியும் மக்கள் மகிழ்வதாகச் சிலம்பில் குறிப்பிடுகிறார் இளங்கோ.

இந்திர விழாவில் மாதவி ஆடுகின்ற பதினோரு வகை ஆடல்களில துடிகொட்டியும் குடக்கூத்தும் முருகனைப் புகழ்ந்து ஆடுபவை.

மாக்கடல் நடுவண்
நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்
படை வீழ்த்து அவுணர் பையுள் எய்தக்
குடை வீழ்த்து அவர்முன் ஆடிய குடையும்

ஆகிய இருவகை நடனங்களின் மூலமாக முருகனின் வெற்றிகளை வெளிப்படுத்துகிறாள் மாதவி.

தவிர, முருகனை வாழ்த்தி வேல்மகன் பாடுகின்ற பாடலின் ஒலியை

வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்

என்று வஞ்சிக்காண்டத்தில் கூறுகிறார் இளங்கோ.

காதல் கொண்ட தலைவியின் நோய் தீர்க்க வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவதும் கூத்து தான்.

ஏன்? குன்றக்குரவையே குமரன் புகழ் பாடும் குன்றுவாழ் மகளிரின் கூத்து நிகழ்ச்சி தானே.

புராணச் செய்திகள்

சங்க இலக்கியங்களில் குறிஞ்சிக் கிழவோனாகக் கூறப்பட்ட குமரன் கயிலை இறைவன் மகனாகவும், மலைமகள் மகனாகவும் சிலம்பில் குறிப்பிடப்படும் போதே அவனோடு புராணச்செய்திகளும் சேர்ந்து இடம்பெறுவதை அறியமுடிகிறது.

மலைவாழ் மகளிர் முருகனை வழிபடுங்கால், அப்பெருமான் முன்னொரு காலத்தில் கடல் நடுவில் புகுந்து சூரபதுமனாகிய மாமரத்தை வேலால் தடிந்தருளியச் செயலையும், பிணிமுகத்தின் மீது எழுந்தருளி

அசுரர்களின் பெருமை அழியுமாறு தேவர்கள் போற்றித் துதிக்கப் பகையை அழித்த செயலையும், கிரவுஞ்ச மலையைச் சுற்றிவரும் தாரகாசுரனின் மார்பைப் பிளந்து, மலையையும் தன் கைவேலால் பிளந்த செய்தியையும் குறிப்பிட்டுப் போற்றுகின்றனர்.

பாரிரும் பௌவத்தின் உள்புக்கு பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே என்றும்
வருதிகிரி கோல் அவுணர் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்றநெடுவேலே

என்றும் புராணச் செய்திகள் சிலம்பில் இடம்பெறுகின்றன.

நின் இணையடி தொழுதேம்

அசுரர்களின் ஆற்றலை அழித்த அறுமுகன் அருள்உள்ளம் கொண்டவன். தன் திருவடி தொழுபவர்க்குத் திருவருள் தருபவன். கவிவேந்தன் இங்கோவும் குமரனின் அரும்பெரும் சிறப்புகளோடு அவனது அருள் உள்ளத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அவன் மலரடி தொழுதால் மனம் விரும்பியதைத் தருவான் என்பதைக் குன்றக்குரவையில் குமரிப்பெண்களின் கூற்றாக அமைக்கிறார் இளங்கோ.

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
ஆலமர் செல்வன் புதல்வன் வரும், வந்தால்
மால்வரை வெற்பன் மணஅணி வேண்டுதுமே

என்று தம் காதலனைத் திருமணம் முடிக்க முருகனை வேண்டுகின்றனர் மலைவாழ் மகளிர்.

குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவ நின் அடியினை தொழுதேம்
துறைமிசை நினது இரு திருவடி தொடுநர்
பெறுக நன்மணம் விடுபிழை மணமெனவே

என்று அறுமுகனின் திருவடி வணங்கி அன்பான இனிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் வேண்டுகின்றனர் குன்றுவாழ் மகளிர்.

முடிவுரை

மேற்கண்ட செய்திகளிலிருந்து முருகப் பெருமான் முழுமுதற்கடவுள் என நம்பும் கௌமார மதமாகிய முருகவழிபாடு சங்ககாலத்தை விட வளர்ச்சியடைந்த நிலையில் சிலம்பில் இடம்பெறுவதை அறியமுடிகிறது. சமய ஒற்றுமையோடும் தேசிய ஒற்றுமையோடும் காவியம் படைத்த இளங்கோவடிகள் முருக வழிபாட்டை மனதைக் கவரும் விதத்தில் அமைத்தமை சிறப்பிற்குரியதாகும். ஆறுமுகனின் அற்புதங்கள் அனைத்தும் அழகிய சொல் ஓவியங்களாக நெஞ்சை அள்ளும் சிலம்பில் தீட்டப்பட்டுள்ளன. எனவே, தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரத்தில் முத்தமிழோன் முருகனின் சிறப்புகளை ஊனிலே உயிர் உள்ளளவும், நிதம் ஓதியுணர்ந்து இன்புறுவது நமது கடமையாகும்.

மாணிக்கவாசகர் வாழ்வியலுக்கு காட்டிய நெறிகள் (சூலை இதழ் 172ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

உ.கருப்பத்தேவன்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21.

கடவுட் காட்சி

மாணிக்கவாசகர் கடவுட் காட்சியைக் கண்டு அனுபவித்தவர். கடவுட் காட்சியில் நெடுந்தொலைவில் வரும்பொழுது வண்ணம் - நிறம் தெரியும். அதனாலேயே சோதியே என்று எரிகின்றசுடரில் ஒளியைப் போற்றி நினைந்து பாராட்டுகின்றார் மாணிக்கவாசகர். செந்தாமரைக்காடு அனைய மேனி என்கின்றார். சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே என்கின்றார். சோதி-அகண்ட ஒளியாகும். புவிக்கோளத்தை விளக்கிக்காட்டுவது சுடராகும். மனைகளையும் வீடுகளையும் விளக்கிக்காட்டுவது ஒளிவிளக்காகும். ஆன்மாவை விளக்கம் செய்து, ஆன்மதரிசனமும் அவ்வழி கடவுள் தரிசனமும் தந்தருளும் பாங்குடையது சோதியாகும். அது ஓங்கி உயர்ந்த சோதியாகும். இந்தத் தத்துவங்களை விளக்குவதுதான் திருவண்ணாமலை தீபமாகும்.

வண்ணந்தான் சேயதன்று எளிதே யன்று
அனேகன் ஏகன் அணுவணுவில் இறந்தாய் என்றங்கு
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய் உன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணிந்தான் பிறவா மற்காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என் சொல்லித் சிந்திக் கேனே
(திருச்சதகம், பா.எண்.25)

திருவடிக்காட்சி

இறைவனை அண்மித்து நிற்கும்பொழுது புலப்படுபவை அவனது திருவடிகள் ஆகும். இறைவனது திருவடிகளைப் பற்றி நாயன்மார்களும் ஆழ்வார்களும் அனுபவித்து அனுபவித்துப் பாடியுள்ளனர். திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்தில் திருவடிகளைப் பற்றிப் பேசியுள்ளார். இறைவனது தாங்கும் தன்மையுடைய பாதங்கள் முயற்சியின் சின்னமாகும். உழைப்பின் சின்னமாகும். நோன்றாய் என்று புறநானூறும், தாளாண்மை என்று திருக்குறளும் இறைவனது திருவடிகளைச் சிறப்பித்துக் கூறும் திருவடி ஞானம் என்பது சமயத் தத்துவமாகும்.

திருவடிக்காட்சி - திருவடிஞானம் எளிதில் கிடைக்காது. முதலில் ஆன்மா இடையீடின்றி சிவத்தை எண்ணுதல் வேண்டும். சிந்தித்தல் வேண்டும். இறைவன் பக்தர்கள் நினைக்கின்றவடிவில் அவர்களுடைய உள்ளத்தில் எழுந்தருளும் தன்மையன், ஆதலால் எவ்வெவர் கூற்றிலும்

உண்மை உண்டு. இறைவன் அணுவாகவும் இருக்கின்றான். இறைவன் ஞானத்தின் திருவுரு. இறைவனை ஞானத்தாலேயே அனுபவிக்கமுடியும். ஆன்மா, ஞானமாகும் பொழுதே கடவுட் காட்சி நிகழும். சிவத்தை அறியும் அறிவு வளர வளர அறியாமையாகிய ஆணவத்தின் ஆற்றல் ஒடுங்கும்.

மாணிக்கவாசகர் அனுபவம்

இறையனுபவத்தில் மாணிக்கவாசகர் அனுபவம் வேறு மற்றஅடியார்கள் அனுபவம் வேறு. இறைவனைக் காணவும் பலர் முயற்சி செய்தனர். முயன்று கொண்டுள்ளனர். ஆனால் கண்டவர் சிலரே. ஆன்மாவின் அறிவு சிற்றறிவு மறதிக்குள்ளாகும் அறிவு பாசபந்தங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் இரையாகும் அறிவு. இந்த அறிவால் தூய்மையே, அறிவே வடிவமாக உள்ள கடவுளைக் காணமுடியாது. நான்முகனும் திருமாலும் தேடிக் காணமுடியாத பரம்பொருள் சிவம் என்பது வரலாறு கற்றுத்தரும் படிப்பினையாகும். கடவுள் கருணை பாலித்தாலன்றிக் கடவுளைக் காணமுடியாது. மாணிக்கவாசகருக்கு இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளி உபதேசித்து அருளினான். காட்சி தந்தான். வருக என்று அழைத்தான், மாணிக்கவாசகரின் அன்பு பெருகி வளர வேண்டும். அந்த அன்பைத் துய்க்கவேண்டும் என்றஇறைவனின் திருவுள்ளமே இதற்குக் காரணம்.

பிரிவு தான் அன்பை வளர்க்கும். மாணிக்கவாசகர் கடவுளைக் கண்டார். அனுபவித்தார். கடவுளை பிரிந்து போனார். மாணிக்கவாசகர் கடவுளிடம் கொண்ட பிரிவு திருவாசகத்தைத் தந்தது. மாணிக்கவாசகர் இறைவனைக் கண்டார். அந்தம் ஒன்றில்லா ஆனந்தத்தைப் பெற்றார். அனுபவித்தார். இடையில் பிரிவு ஏற்பட்டுவிட்டது. இதனை மாணிக்கவாசகர் ஆற்றிக்கொள்ள இயலாமல் தவிக்கிறார்.

முடிவுரை

இறையடியவர்கள் தமது அன்பினால் வேதனைகளைத் தாங்கிக் கொள்ளுவதை இருளிரவு எனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர். இறையடியவர்கள் பெறும் இறைக்காட்சி அனுபவமும் அதனால் அவர்கள் பெறும் மெய்யறிவும் ஒளிநெறியாகும். சமயவாழ்வில், ஆன்மீக நெறியில் ஒன்றன் மறுதலை மற்றொன்று அமைகின்றது. இவ்விரண்டினையும் தெளிவுறுத்தும் வகையில் மாணிக்கவாசகரின் திருவாசகம் அமைந்துள்ளது. இதனை மாணிக்கவாசகர் வாழ்வியலுக்குக் காட்டிய சமய தத்துவ நெறிகளாகக் கொள்ளலாம்.

குறிப்புகள்

1. திருவாசகம், கீர்த்தித் திருவகவல் 40-41
2. திருவாசகம், அருட்பத்து 4
3. திருவாசகம், அற்புதப்பத்து 2
4. திருவாசகம், பிடித்த பத்து 7
5. திருவாசகம், திருப்பாண்டிப் பதிகம் 1
6. மேலது, 3.
7. திருவாசகம், புணர்ச்சிப்பத்து 6

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

பேரறிஞர். திரு. தமிழண்ணல்

பேரறிஞர் திரு. செ. கந்தசாமி

டாக்டர் திரு. ந. சேதுராமன்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

பேரறிஞர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

திரு. சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484